உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க வனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-௪௧.] தாரண-சித்திரை, வைகாசி, ஆனிமீ [பகுதி-௬,௭,௮.

Vol. 41. **April—July 1944.** **No. 6,7,8.**

உள்ளுறை.

பத்துப்பாட்டும் அவற்றின் காலமுறையும்:—	ஸ்ரீ. ராவ்ஸாஹிப். S. வையாபுரிப்பிள்ளையவர்கள், B.A., B.L.	௨௦௧—௨௦௮
ஏர் என்னும் வைப்புத்தலம்:—	ஸ்ரீ. T V. சதாசிவபண்டாரத்தாரவர்கள்.	௨௦௯—௨௧௪
பட்டினப்பாலையைப் பற்றிய ஓர் சாதனச் செய்யுள்:—	ஸ்ரீ. ராவ்ஸாஹிப். S. வையாபுரிப்பிள்ளையவர்கள் B.A., B.L.	௨௧௪—௨௧௬
கம்பராமாயணசாரம் (உத்தரகாண்டம்):—	ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள் G.B.V.C.	௨௧௭—௨௨௮
பண்டைத்தமிழர்:—	சுவாமி ஞானப்பிரகாசரவர்கள், நல்லூர்.	௨௨௯—௨௩௪
மதிப்புரை:— ...	... ...	௨௩௪—௨௩௬
பிழைதிருத்தம்:—		௨௩௬

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0.

1944.

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and Published by Thiru. Narayana Iyengar at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.

ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும் மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவை சம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,
மானேஜர்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

I. சங்கப்பிரசுரம்.	ரூ.	அ.	பை.
1. ஞானாமிர்த மூலமும் உரையும் ...	1	0	0
2. சைவமஞ்சரி	1	8	0
3. *யாப்பணியிலக்கணங்கள்			
4. வைத்தியசாரசங்கிரகம் ...	5	0	0
5. பன்னூற்றிரட்டு	3	0	0
6. மகாபாரதம் அரும்பதவுரையுடன் ...	4	0	0
7. *தோத்திரத்திரட்டு			
8. *தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய முதற்பாகம்	6	0	0
* ஷை இரண்டாம்பாகம் ...	4	8	0
ஷை மூன்றாம்பாகம் ...	5	0	0
9. *அபிதானசிந்தாமணி			
10. தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய)	1	12	0
11. திருவருணைக்கலம்பகம்	0	6	0
12. *அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ் ...			
13. கலைசைச்சிலேடைவெண்பா ...	0	6	0
14. *தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ...			
15. திருவாரூர் நான்மணிமாலை ...	0	4	0
16. ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சம் ...	1	4	0
பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) ...	0	4	0
*திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன	0	1	0

செந்தமிழ்.

தொகுதி-௪௧.] தாரண-சித்திரை, வைகாசி, ஆனி௴ [பகுதி-௬,௭,௮.

Vol. 41. April—July 1944. No. 6,7,8.

பத்துப்பாட்டும் அவற்றின் காலமுறையும்

சென்னைப் பல்கலைக்கழகத்துத் தமிழாராய்ச்சித்துறைத்தலைவர்

ராவ்ஸாஹிப் ஸ்ரீ. எஸ். வையாபுரிப்பிள்ளையவர்கள் எழுதியது.

பத்துப்பாட்டு என்பது மிகப் பழைய பத்துச்செய்யுட்கள் அடங்கிய ஒரு தொகுதிநூலின்பெயர். இப்பெயர் முதன்முதலில் மயிலைநாதருரையில் (நன்னூல் 387) தரப்பட்டுள்ளது. தொல்காப்பியத்திற்கு உரையிட்ட பேராசிரியர் இத்தொகுதியைப் 'பாட்டு' என்றே வழங்கினர் (செய்யுளியல். 50. 80 உரை). இதன் உள்ளுறையானநூல்கள் இன்னவென்பது,

> 'முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
> பெருகு வளமதுரைக் காஞ்சி—மருவினிய
> கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
> பாலை கடாத்தொடும் பத்து'

என்ற பழஞ்செய்யுளால் விளங்கும். இந்நூல்கள் சங்ககாலத்துப் புலவர்களால் இயற்றப்பெற்றுச் சில நூற்றாண்டுகட்குப் பின்னர்த் தொகுக்கப்பட்டன. பத்துப்பாட்டு என்ற பெயரும் தொகுக்கப் பட்டபின்னரே வழங்கத்தொடங்கியிருத்தல்வேண்டும். இப்பெயர் வழக்கு நிலைத்துவிட்டபின்னர்ப் பன்னிருபாட்டியலார்,

> 'நூறடிச் சிறுமை நூற்றுப்பத் தளவே
> ஏறிய அடியின் ஈரைம் பாட்டுத்
> தொகுப்பது பத்துப் பாட்டெனப் படுமே' (384)
> 'அதுவே, அகவலின் வருமென அறைகுவர் புலவர்' (385)

என்ற இரண்டுசூத்திரங்களை அமைத்தனர். பத்துப்பாட்டுள் மிகச்சிறியது முல்லைப்பாட்டு; இதன்கண் 103 அடிகள் உள்ளன. மிகப்பெரியது மதுரைக்காஞ்சி; இதன்கண் 782 அடிகள் உள்ளன.

இப்பாட்டுகள்பற்றிய விவரங்களனைத்தும் அடுத்துத்தந் துள்ள பட்டிகையிற் காணலாம்.

நூற்பெயர்	அடி	ஆசிரியர்	பாடப்பெற்ருேர்	பிறகுறிப்புக்கள்
1 முருகாற்றுப் படை	317	நக்கீரர் ...	முருகக்கடவுள் ...	...
2 பொருநராற்றுப் படை	248	முடத்தாமக்கண்ணியார்	கரிகாற்பெருவளத்தான் ..	...
3 சிறுபாணுற்றுப் படை	269	நல்லூர் நத்தத்தனர்	நல்லியக்கோடன் ...	எழுவர்பூண்டஈகைச்செந்நுகம் (113) ஒப்பிடுக: புறம். 158.
4 பெரும்பாணுற்றுப்படை	500	கடியலூர் உருத்திரங் கண்ணனர்	தொண்டைமான் இளந்திரையன்	...
5 முல்லைப்பாட்டு...	103	நப்பூதனர் ...	...	மிலேச்சர் (60 - 66)
6 மதுரைக்காஞ்சி	782	மாங்குடி மருதனர்...	தலையாலங்கானத்துச்செருவென்ற நெடுஞ்செழியன்	நன்னன் குறிக்கப்பட்டுள்ளான் (618 - 9)
7 நெடுநல்வாடை	188	நக்கீரர் ...	ஷை ...	மிலேச்சர் (31 - 5)
8 குறிஞ்சிப்பாட்டு	261	கபிலர் ...	ஆரியவரசன் பிரகத்தன்..	கபிலரை நக்கீரர் குறித்துள்ளனர் (அகம் 78, 141)
9 பட்டினப்பாலை ...	301	கடியலூர் உருத்திரங் கண்ணனர்	கரிகாற்பெருவளத்தான்...	...
10 மலைபடுகடாம் ...	583	இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனர்	நன்னன்சேய் நன்னன் ...	...

இந்நூல்கள் ஒருகாலத்தன்றிப் பல்வேறுகாலத்திற் பல்வேறு இடத்தினராகிய பல புலவர்களால் இயற்றப்பட்டனவாம். இது பற்றி ஐயுறுவாரில்லை; இது குறித்து ஆராய்வதும் வேண்டற்பால தன்று. எனவே காலம்பற்றி எம்முறையில் இவை தோன்றின வென்பதை அறுதியிடுவதே இங்கு மேற்கொண்ட நோக்கம்.

மேலே தந்துள்ள பட்டிகையினின்றும் ஒரு சில செய்திகள் புலப்படுகின்றன. பொருநராற்றுப்படையும் பட்டினப்பாலையும் கரிகாற்பெருவளத்தானைப்பற்றியன. பட்டினப்பாலையியற்றிய கடிய லூர் உருத்திரங்கண்ணனார் பெரும்பாணாற்றுப்படையின் ஆசிரி யருமாவர். எனவே இம்மூன்றுநூல்களும் சமகாலத்தனவாம்.

மதுரைக்காஞ்சியும் நெடுநல்வாடையும் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப்பற்றியன. நெடுநல்வாடையை இயற்றியவர் நக்கீரர்; இப்பெயருடையார் முருகாற்றுப்படையை யும் இயற்றியவராகக் கூறப்படுகிறார். மலைபடுகடாத்தின் பாட் டுடைத்தலைவன் நன்னன்சேய்நன்னன். இவன்,

'தொலையா நல்லிசை யுலகமொடு நிற்ப.........
புலவோர்க்குச் சொரியுமவன் ஈகை மாரியும்' (70-72)

எனக் குறிக்கப்படுகின்றான். இந் நன்னனே, மதுரைக்காஞ்சியில்,

'பேரிசை நன்னன் பெரும்பெயர் நன்னாட்
சேரி விழவின் ஆர்ப்பெழுந் தாங்கு' (618—9)

எனக் குறிப்பிடப்பட்டவனாதல் தகும்.* எனவே இந் நான்குநூல் களும் சமகாலத்தன என்று கொள்ளலாம். மலைபடுகடாம் இந் நான்கினுள் முற்பட்டதாகலாம்.

குறிஞ்சிப்பாட்டின் ஆசிரியரான கபிலரை,

'உலகுடன் திரிதரும் பலர்புகழ் நல்லிசை
வாய்மொழிக் கபிலன் சூழச் சேய்நின்று
செழுஞ்செய்ந் நெல்லின் விளைகதிர் கொண்டு
தடந்தா ளாம்பல் மலரொடு கூட்டி

---

*இக்கருத்தே படச் செந்தமிழ் 4-ஆம் தொகுதியில் (பக்கம் 183-193) நன்னன் வேண்மான் என்ற கட்டுரையில் எழுதப்பட்டிருக்கிறது.

யாண்டுபல கழிய வேண்டுவயிற் பிழையா
தாளிடூஉக் கடந்து வாளமர் உழக்கி
ஏந்துகோட் டியானை வேந்தர் ஓட்டிய
கடும்பரிப் புரவிக் கைவண் பாரி
தீம்பெரும் பைஞ்சுனைப் பூத்த
தேங்கமழ் புதுமலர் நாறுமிவள் நுதலே' (அகம். 78)

என நக்கீரர் குறிப்பிட்டுள்ளார். இதனால் மதுரைக்காஞ்சி முதலிய நான்குநூல்களுக்கும் குறிஞ்சிப்பாட்டு முற்பட்டதாதல்வேண்டும். மேலும், கரிகாற்பெருவளத்தானது தந்தையாகிய உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னியைப் பரணர் பாடியுள்ளார். இவரது முதுமைக் காலத்து இளைஞராயிருந்தவர் கபிலர் என்பது பதிற்றுப்பத்தில் இவர்கள் பாட்டுக்களின் வைப்புமுறையால் விளங்கும். எனவே கபிலரது குறிஞ்சிப்பாட்டுக் கரிகாலனதுகாலத்திலே தோன்றிய தெனக்கொள்ளலாம். இங்ஙனம் கொள்ள இயைபு இருத்தலால், பொருநராற்றுப்படை முதலிய மூன்றனோடு குறிஞ்சிப்பாட்டும் சமகாலத்ததாகும்.

முல்லைப்பாட்டின் காலமுறையைத்தெரிதற்கு மேற்குறித்தன போன்ற சான்றுகள் இல்லை. ஆனால், முல்லைப்பாட்டு என்ற பெயர், குறிஞ்சிப்பாட்டு என்பதனைப் போன்று அமைக்கப்பட்டுள்ளது. இப்பெயரமைப்பு முல்லைப்பாட்டுப் பிற்பட்டதென்பதனையுணர்த்து கின்றது. அன்றியும், அதன்கண் சில அரிய செய்திகள் கூறப்பட் டுள்ளன.

'மெய்ப்பை புக்க வெருவருந் தோற்றத்து
வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்
புலித்தொடர் விட்ட புனைமா ணல்லிற்
திருமணி விளக்கங் காட்டித் திண்ஞாண்
எழினி வாங்கிய ஈரறைப் பள்ளியுள்
உடம்பி னுரைக்கு முரையா நாவிற்
படம்புகு மிலேச்ச ருழையராக' (60—66)

என்பது முல்லைப்பாட்டுப்பகுதி. இங்கே யவனரது கைத்தொழிற் சிறப்பு ஒன்றும், மிலேச்சரது செய்தியொன்றும் உணர்த்தப்படுகின்றன. நெடுநல்வாடையிலும் யவனரது பிறிதொரு கைத்தொழிற்சிறப்பும் மிலேச்சரது பிறிதொரு செய்தியும் காணப்படுகின்றன.

'படலைக் கண்ணிப் பரேரெறுழ்த் திணிதோள்
முடலை யாக்கை முழுவலி மாக்கள்
வண்டுமூசு தேறல் மாந்தி மகிழ்சிறந்து
துவலைத் தண்டுளி பேணார் பகலிறந்து
இருகோட் டறுவையர் வேண்டுவயிற் றிரிதர' (31—5)

என்பதும்,

'யவனர் இயற்றிய வினைமாண் பாவை' (101)

என்பதும் நெடுநல்வாடைப்பகுதிகள். முற்பகுதியுள் மாக்கள் ஆவார் மிலேச்சர் என்று உரைகூறப்பட்டுளது. யவனர், மிலேச்சர் முதலினோரது தொடர்பு அருகியல்லது பண்டைத் தமிழகச்சரித்திரத்திற் காணப்பெறுதலொன்றும். சங்கஇலக்கியங்களில் இவர்களைப் பற்றிய குறிப்புக் கிடைப்பது மிகஅருமை. இவ்வகைக் குறிப்புக்கள் காணும் நூல்கள் காலமுறையில் அடுத்தடுத்துத் தோன்றின என்று கொள்ளுதல் பொருத்தமே. எனவே, நெடுநல்வாடையை அடுத்து முல்லைப்பாட்டுத் தோன்றியிருத்தல்கூடும்.

இவ்வூகம் வேறுசில காரணங்களாலும் உறுதியடைகின்றது. இரண்டுநூல்களிலும் ஒத்த கருத்துக்களும் தொடர்களும் காணப்படுகின்றன.

'... ... ...நெல்லொடு
நாழி கொண்ட நறுவீ முல்லை
அரும்பவி ழலரி தூஉய்க்கை தொழுது' (8—10)

என்ற முல்லைப்பாட்டு

'நெல்லு மலருந் தூஉய்க் கைதொழுது' (43)

என்ற நெடுநல்வாடைக்கருத்தோடு ஒத்தமைந்தது.

'இன்னே வருகுவர்'

என்ற தொடர் ஈரிடத்தும் (முல்லை. 16=நெடுநல். 155) வருகின்றது.

'வெண்மழை'

என்ற தொடரும் (முல்லை. 100=நெடுநல். 19) இருநூல்களிலும் பயில்கின்றது.

முல்லைப்பாட்டு இங்ஙனமாக, சிறுபாணாற்றுப்படை,

'வானம் வாய்த்த வளமலைக் கவாஅற்
கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய
அருந்திற லணங்கின் ஆவியர் பெருமகன்
பெருங்கல் நாடன் பேகனும், சுரும்புண
நறுவீ யுறைக்கு நாக நெடுவழிச்
சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்குவெள் ளருவி வீழுஞ் சாரற்
பறம்பிற் கோமான் பாரியும், கறங்குமணி
வாலுளைப் புரவியொடு வையக மருள
ஈர நன்மொழி இரவலர்க் கீந்த
அழல்திகழ்ந் திமைக்கும் அஞ்சுவரு நெடுவேற்
கழல்தொடித் தடக்கைக் காரியும், நிழல்திகழ்
நீல நாகம் நல்கிய கலிங்கம்
ஆலமர் செல்வற் கமர்ந்தனன் கொடுத்த
சாவந் தாங்கிய சாந்துபுலர் திணிதோள்
ஆர்வ நன்மொழி ஆயும், மால்வரைக்
கமழ்பூஞ் சாரற் கவினிய நெல்லி
அமிழ்துவிளை தீங்கனி ஔவைக் கீந்த
உரவுச்சினங் கனலும் ஒளிதிகழ் நெடுவேல்
அரவக்கடற் றானை அதிகனும், கராஅது
நட்டோ ருவப்ப நடைப்பரி காரம்
முட்டாது கொடுத்த முனைவிளங்கு தடக்கைத்
துளிமழை பொழியும் வளிதுஞ்சு நெடுங்கோட்டு
நளிமலை நாடன் நள்ளியும், நளிசினை

நறும்போது கஞலிய நாகுமுதிர் நாகத்துக்
குறும்பொறை நன்னாடு கோடியர்க் கீந்த
காரிக் குதிரைக் காரியொடு மலைந்த
ஓரிக் குதிரை ஓரியும் எனவாங்கு
எழுசமங் கடந்த எழுவுறழ் திணிதோள்
எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்' (84—112)

என்ற அடிகளிற் கடையெழுவள்ளல்களின் வரலாற்றை இறந்த காலச்செய்தியாக உரைக்கின்றது. ஆகவே, இவ்வள்ளல்களின்காலத் திற்குப்பின் இந்நூல் இயற்றப்பெற்றதாதல்வேண்டும். பரணர், கபிலர், முடமோசியார், ஔவையார், வன்பரணர் முதலியவர்கள் வள்ளல்களின் சமகாலத்தவராய் வாழ்ந்து அவர்களைப் பாடியிருக் கின்றார்கள். இவர்கள்காலத்திற்குப் பின்புதோன்றியதெனல் வேண்டும் இச்சிறுபாணாற்றுப்படையை. இங்ஙனமே கூர்ந்து ஆரா யின், பத்துப்பாட்டினுள் ஏனை ஒன்பது ஆசிரியர்களுக்குப்பின் நத் தத்தனார் வாழ்ந்து சிறுபாணாற்றுப்படையை இயற்றினர் என்பதே துணிவாகும்.

மேற்குறித்த காரணங்களாற் பத்துப்பாட்டுக்களும் கீழ்க் காட்டியபடி காலம்பற்றி மூன்று தொகுதிகளாக அமைகின்றன.

I 1 பொருநாற்றுப்படை
2 பெரும்பாணாற்றுப்படை
3 பட்டினப்பாலை
4 குறிஞ்சிப்பாட்டு

II 5 மலைபடுகடாம்
6 மதுரைக்காஞ்சி
7 நெடுநல்வாடை
8 முருகாற்றுப்படை

III 9 முல்லைப்பாட்டு 10 சிறுபாணாற்றுப்படை

இத்தொகுதிகளுள் இரண்டாவதனைச் சார்ந்த நெடுநல்வாடை யின் ஆசிரியர் நக்கீரர். இவர் முதற்றொகுதியில் இரண்டாவதன் பாட்டுடைத்தலைவனான கரிகால்வளவனை அகம் 141-ல்,

'செல்குடி நிறுத்த பெரும்பெயர்க் கரிகால்
வெல்போர்ச் சோழன் இடையாற் றன்ன
நல்லிசை வெறுக்கை'

எனக் குறிப்பிடுகின்றார். ஆனால் இருவரும் சமகாலத்தினர் என்று கொள்வதற்குரிய சான்று யாதும் இச்செய்யுட்பகுதியிற் காணப்படவில்லை. ஆதலால் நக்கீரர் கரிகால்வளவனுக்குப் பிற்பட்டவர் என்று கொள்ளுதல் தகும். இவ்வாற் பாடப்பட்ட தலையாலங்கானத்துச்செருவென்ற நெடுஞ்செழியனும் சோழன் கரிகாற்பெருவளத்தானுக்குப் பிற்பட்ட காலத்தவன் என்ற முடிவு பெறப்படுகிறது. இம்முடிபு வேறொருகாரணத்தாலும் உறுதியடைகிறது. கரிகாலனைப் பாடியபுலவர்களுள் ஒருவரேனும் நெடுஞ்செழியனைப் பாடவில்லை.

இங்ஙனமாக முதற்றொகுதிநூல்கள் இரண்டாந்தொகுதி நூல்களுக்குக் காலத்தால் முற்பட்டனவாதல் தெளிவாகின்றது. ஆனால் பின் தொகுதியில் திருமுருகாற்றுப்படையின் காலம் மீண்டும் ஆராய்தற்குரியது. இதனை இயற்றியவர் நக்கீரர் என்ற பெயருடையவரெனினும் நெடுநல்வாடை ஆசிரியரின் வேறானவர் என்றும், பிற்பட்ட காலத்தவர் என்றும் கருதுதற்குரிய சான்றுகள் உள்ளன. இவற்றை எனது திருமுருகாற்றுப்படைப் பதிப்பில் (மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் செந்தமிழ்ப் பிரசுரம்) நன்கு விளக்கியுள்ளேன். ஆதலால் முருகாற்றுப்படை பத்துப்பாட்டுள் இறுதியில் இயற்றப்பெற்றதெனக் கொள்ளல்வேண்டும்.

எனவே, கீழ்க்கண்டவாறு காலமுறை யொன்று பெறப்படுகின்றது.

1 பொருநராற்றுப்படை	6 மதுரைக்காஞ்சி
2 பெரும்பாணாற்றுபடை	7 நெடுநல்வாடை
3 பட்டினப்பாலை	8 முல்லைப்பாட்டு
4 குறிஞ்சிப்பாட்டு	9 சிறுபாணாற்றுப்படை
5 மலைபடுகடாம்	10 திருமுருகாற்றுப்படை

சங்க இலக்கியங்களின் வரலாற்றினை அறிந்துகொள்வதற்கு இம்முறை பெரிதும் பயன்படவல்லது.

௨

ஏர் என்னும் வைப்புத்தலம்.

திரு. T. V. சதாசிவ பண்டாரத்தாரவர்கள்.

கும்பகோணத்திற்கு வடபால் இரண்டுமயில்தூரத்தில் ஏரகரம் என்ற சிற்றூர் ஒன்று உளது. அது சைவசமயாசாரியர் நால்வர்களாலும் பாடப்பெற்ற திருப்புறம்பியம் என்னுந்தலத்திற்குத் தென்கிழக்கே இரண்டுமயில்தூரத்திலும், திருஞான சம்பந்தசுவாமிகளாலும் திருநாவுக்கரசுசுவாமிகளாலும் பதிகங்கள் பாடப்பெற்ற இன்னம்பர் என்னும் திருப்பதிக்கு வடகிழக்கில் இரண்டுமயில்தூரத்திலும் இருக்கின்றது. கல்லாமக்கள் அதனை ஏராரம் எனவும் ஏராவரம் எனவும் வழங்குகின்றனர். அவ்வூர் இதுபோது மிகவும் அழிவுற்றநிலையில் இருக்கின்றது. ஆயினும், பண்டைக்காலத்தில் நம் சோழமண்டலத்திற் சிறந்து விளங்கிய பேரூர்களுள், அச்சிற்றூரும் ஒன்றாக இருந்திருத்தல்வேண்டும் என்பதை அதனை ஒருமுறை பார்த்தோரும் நன்குணர்ந்துகொள்ளலாம். அப் பழைய வூரில் தென்மேற்குமூலையில் வயல்களுக்கு அணித்தாக ஒரு சிவாலயம் உளது. அது பாதுகாப்பாரின்றிச் சிதைந்து அழிந்துபோகும்நிலையில் இதுபோது இருக்கின்றது. அவ்வாலயத்தின் திருமதில்களும் திருச்சுற்றுமாளிகைகளும் கோபுரமும் இடிந்துபோயின; மகாமண்டபம்மாத்திரம் இடிந்து விழக்கூடியநிலையில் உள்ளது. அத்திருக்கோயிலுக்கு யான்சென்று பார்த்தபோது அது பழமைவாய்ந்த ஒரு சிவாலயம் என்று துணிதற்குரியதாக இருந்தது. அதன் கருப்பக்கிரகத்தின் தென்புறத்திற் பெரியதோர் கல்வெட்டும் காணப்பட்டது. அக் கல்வெட்டு மிகச் சிதைந்தும் நிலத்திற் புதைந்தும் இருந்தமையின் அதனை முழுதும் படித்தற்கு இயலவில்லை. ஆயினும், அஃது எவ்வரசன்

காலத்தில் வரையப்பெற்றது என்பதையும் அத்திருக்கோயில் அமைந்துள்ள ஊரின் உண்மைப்பெயர் யாது என்பதையும் அறிந்துகொள்ளவேண்டும் என்ற விருப்பம் உண்டாயிற்று. ஆகவே, நிலத்திற் புதைந்திருந்த பகுதியைச் சில நண்பரது உதவி கொண்டு தோண்டிப்பார்த்தபோது அது கி. பி. 1120 முதல் 1136 வரையிற் சோழமண்டலத்திற் சக்கரவர்த்தியாக வீற்றிருந்து ஆட்சிபுரிந்த விக்கிரமசோழன்காலத்துக் கல்வெட்டு என்பது நன்கு வெளியாயிற்று. விக்கிரமசோழனது நீண்ட மெய்க்கீர்த்தியில் 'ஐம் படைப் பருவத்து வெம்படைதாங்கியும்' என்பது முதலாகவுள்ள பகுதியும் காணப்பட்டது. பின்னர், அக்கல்வெட்டின் எஞ்சியபகுதியையும் இயன்றவரையில் முயன்று படித்துக்கொண்டு வருங்கால், இன்னம்பர்நாட்டு ஏராகிய மும்மடி சோழமங்கலம் என்னும் தொடர்மொழிகள் அத்திருக்கோயில் அமைந்துள்ள அவ்வூரின் பெயர் யாது என்பதைத் தெளிவாகப் புலப்படுத்தி மகிழ்வூட்டின. பிறகு, அவ்வூர் வைப்புத்தலங்களுள் ஒன்று என்பது எனது ஆராய்ச்சியிற் புலப்பட்டமையின் அதனை ஈண்டு வரையலானேன்.

சைவசமயகுரவர்களுள் ஒருவராகிய திருநாவுக்கரசுசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய க்ஷேத்திரக்கோவைத் திருத்தாண்டகத்தில் உள்ள,

"இடைமரு தீங்கோய் இராமேச்சுரம்
இன்னம்பர் ஏர் இடவை ஏமப்பேறூர்
சடைமுடி சாலைக்குடி தக்களூர்
தலையாலங்காடு தலைச்சங்காடு
கொடுமுடி குற்றாலங் கொள்ளம்பூதூர்
கோத்திட்டை கோட்டாறு கோட்டுக்காடு
கடைமுடி கானூர் கடம்பந்துறை
கயிலாயநாதனையே காணலாமே"

என்னும் திருப்பாடலில் ஏர் என்ற திருப்பதியொன்று கூறப்பட்டுள்ளது. அன்றியும், அவ்வடிகள் அருளிய திருவீழிமிழலைத்திருத்தாண்டகத்திலுள்ள

"பெரும்புலியூர் விரும்பினார் பெரும்பாழியார்
பெரும்பற்றப்புலியூர்மூலட்டானத்தார்
இரும்புதலார் இரும்பூளையுள்ளார் ஏரார்
இன்னம்பரார் ஈங்கோய்மலையார் இன்சொற்
கரும்பனையாள் உமையோடும் கருகாவூரார்
கருப்பறியலூரார் காவீரத்தார்
விரும்பமரர் இரவுபகல் பரவியேத்த
வீழிமிழலையே மேவினாரே"

என்ற திருப்பாடலினும் ஏர் என்னும் திருப்பதி குறிக்கப்பெற்றிருத்தல் அறியத்தக்கதாகும். வாகீசப்பெருமானது திருவாக்கிற் பயின்றுள்ள அத்திருப்பதிக்கு அவ்வடிகள் திருவாய்மலர்ந்தருளிய தனிப்பதிகம் இதுபோது காணப்படவில்லை. அன்றியும், திருஞானசம்பந்தசுவாமிகளும் சுந்தரமூர்த்திசுவாமிகளும் அருளிய பதிகங்களும் அத்திருப்பதிக்கு இல்லை. சமயகுரவர்களாகிய இப்பெரியோர்கள் மூவரும் அருளிய தேவாரப்பதிகங்களுள் பல இறந்துபோயின என்று சொல்லக்கேட்கின்றோம். அங்ஙனம் இறந்துபோன பதிகங்களுள் ஏர் என்னும் திருப்பதிக்குரிய பதிகங்களும் இருத்தல் கூடும் என்பது திண்ணம். ஆயினும், திருநாவுக்கரையரது திருவீழிமிழலைத்திருப்பதிகத்திலும் க்ஷேத்திரக்கோவைத்திருத்தாண்டகத்திலும் அத்திருப்பதி கூறப்பட்டிருத்தலின் அது தேவார வைப்புத்தலங்களுள் ஒன்றாகும் என்பது ஒருதலை. எனவே, ஏர் என்னும் அவ்வைப்புத்தலம் யாண்டையது? எனின் அஃது 'இன்னம்பர்நாட்டு ஏராகிய மும்முடிசோழமங்கலம்' என்று கல்வெட்டுக்களிற் குறிக்கப்பெற்று இதுபோது ஏரகாம், ஏராரம் என்ற பெயர்களுடன் கும்பகோணத்திற்கு வடபால் இரண்டு மயில் தூரத்தில் உள்ள ஊரேயாதல்வேண்டும்.

இனி, ஏரகரம் திருக்கோயிலிற் காணப்பெறும் அக்கல்வெட்டு, அவ்வூர் இன்னம்பர்நாட்டில் உள்ளது என்பதையும், பழையகாலத்தில் ஏர் என்னும்பெயருடன் நிலவியது என்பதையும், அதற்கு மும்மடிசோழமங்கலம் என்ற வேறொரு பெயரும் அந்நாளில் இருந்தது என்பதையும் நன்குபுலப்படுத்துகின்றது. இவ்வின்னம்பர் நாடு பண்டைக்காலத்திற் சோழமண்டலத்திற் காவேரிக்கு வடகரையிலிருந்த பலநாடுகளுள் ஒன்றாகும்; இஃது இன்னம்பரைத் தலைநகராகக்கொண்டது. கும்பகோணந்தாலூகாவில் உள்ள கொட்டையூர், மேலக்காவேரி, கருப்பூர், அசூர், ஏரகரம் முதலான ஊர்களையும் பாவநாசந்தாலூகாவில் உள்ள ஆதனூர், மருத்துவக்குடி முதலான ஊர்களையும் தன்னகத்துக்கொண்டு இவ்வின்னம்பர் நாடு முற்காலத்தில் விளங்கிற்று என்பது பல கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றது. எனவே, தற்காலத்தில் இந்நாடு கும்பகோணம், பாவநாசம் தாலூகாக்களில் அடங்கியுள்ள ஒருபகுதி எனலாம். இன்னம்பர்நாட்டில் உள்ளதென்று கல்வெட்டுக்களால் அறியப்படும் ஏர் என்னும் திருப்பதி இந்நாளிலும் இன்னம்பருக்கு அணித்தாகவிருப்பது குறிப்பிடத்தக்கது. அன்றியும், அத்தலத்தைத் தம் திருப்பதிகங்களிற் கூறியுள்ள திருநாவுக்கரசுசுவாமிகள் 'இன்னம்பர் ஏர்' எனவும் 'ஏரார் இன்னம்பரார்' எனவும் அதனை இன்னம்பருக்கு அணித்தாகவைத்துக் கூறியிருப்பதும் ஈண்டு அறிந்துகொள்ளற்பாலதாகும்.

இனி, முதல் இராசராசசோழனல் எடுப்பிக்கப்பெற்ற தஞ்சை இராசராசேச்சுரத்தில் உள்ள கல்வெட்டு ஒன்று ஏர் என்னும் திருப்பதி இன்னம்பர்நாட்டில் உள்ளது என்று உணர்த்துகின்றது. அது "ராஜேந்திரசிங்கவளநாட்டு இன்னம்பர்நாட்டுப் பழைய வானவன்மகாதேவிச்சதுர்வேதிமங்கலத்துச்சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும் (எ௰) இந்நாட்டு அசூர்சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும் (எ௨) இந்நாட்டு ஏராகிய மும்மடி சோழமங்கலத்தார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும் (எ௩)

இந்நாட்டு ஸ்ரீபராந்தகச் சதுர்வேதிமங்கலத்துச்சபையார் இடக்கடவ திருமெய்காப்பு இரண்டும்" (South Indian Inscriptions Volume II. No. 70) என்பதாம். தஞ்சைப் பெரியகோயிலில் உள்ள இக் கல்வெட்டும் இன்னம்பருக்கு அண்மையில் உள்ள ஏரகரத்தில் அமைந்துள்ள கோயிலிற் காணப்படும் கல்வெட்டும் தம்முள் ஒற்றுமையுடையனவாய் ஏர் என்ற ஊர் இன்னம்பர்நாட்டில் உளது என்றுணர்த்துதல் காண்க. ஆகவே, ஏர் என்னும் வைப்புத்தலம் இந்நாளில் ஏரகரம் என்ற பெயருடன் கும்பகோணம் தாலூகாவில் காவேரியாற்றிற்கு வடகரையில் உள்ளது என்பது நன்கு உறுதியெய்துகின்றது.

பத்து, பன்னிரண்டாம் நூற்றுண்டுகளில் வைப்புத்தலமாகிய ஏர், மும்மடி சோழமங்கலம் என்ற மற்ருருபெயரும் உடையதாக இருந்தது என்பது ஏரகரத்திலுள்ள கல்வெட்டாலும் தஞ்சைப்பெரியகோயிலிலுள்ள கல்வெட்டாலும் புலப்படுகின்றது. சோழமன்னரது ஆட்சிக்காலங்களில் நம் தமிழகத்தில் உள்ள பல நகரங்கள் அவ்வேந்தர்களது பெயர்களால் வழங்கப்பெற்றுவந்தன என்பது பல கல்வெட்டுக்களால் தெரிகின்றது. கொங்குநாட்டுத் தலங்களுள் ஒன்ருகவுள்ளதும் திருவானிலை என்னும் திருக்கோயிலைத் தன்னகத்துக்கொண்டதுமாகிய கருவூர் அந்நாளில் முடிவழங்கு சோழபுரம் என்ற பெயரையும் உடையதாக இருந்தது என்பது அவ்வூரிலுள்ள கல்வெட்டுக்களால் வெளியாகின்றது (South Indian Inscription Vol. III. Nos. 23 and 24). நம் சோழமண்டலத்திற் காவேரிக்குத் தென்பால் உள்ள தலங்களுள் ஒன்ருகிய பழையாறு என்ற நகர் முடிகொண்டசோழபுரம் என்னும் பெயரையும் முற்காலத்தில் உடையதாக இருந்தது (Inscription No. 271 of 1927). அவ்வூர்கள் கருவூராகிய முடிவழங்குசோழபுரம் எனவும் பழையாருகிய முடிகொண்டசோழபுரம் எனவும் கல்வெட்டுக்களில் வரையப்பெற்றிருத்தல்போல ஏர் என்னும் தலமும், ஏராகிய மும்மடிசோழமங்கலம் என்று குறிக்கப்பெற்றுள்ளது.

மும்முடிசோழன் மும்மடிச்சோழன் என்றபெயர்கள் முதல் இராசராசசோழனுக்கு வழங்கிவந்தன என்று தெரிகிறது. எனவே, முதல் இராசராசசோழனது ஆட்சிக்காலத்திலேதான் ஏர் என்னும் தலம் மும்மடிசோழமங்கலம் என்ற பெயரை எய்தியிருத்தல்வேண்டும் என்பது திண்ணம். தஞ்சைப்பெரியகோயிலில் உள்ள முதல் இராசராசசோழனது கல்வெட்டும் இதனை வலியுறுத்துகின்றது. ஆகவே, சோழமன்னரது ஆட்சிக்காலங்களில் மும்மடிசோழமங்கலம் ஏர் என்ற பெயர்களை உடையதாயிருந்த ஊர் இந்நாளில் ஏரகரம் என்று வழங்கிவருகின்றது என்பதும், அஃது அப்பர்சுவாமிகளாற் குறிக்கப்பெற்ற வைப்புத்தலங்களுள் ஒன்று என்பதும் நன்கு வெளியாதல் காண்க.

பட்டினப்பாலையைப் பற்றிய
ஓர் சாஸனச்செய்யுள்

திரு. ராவ்ஸாஹேப். எஸ். வையாபுரிப்பிள்ளையவர்கள் பி. ஏ., பி. எல்.

சென்னைப் பல்கலைக்கழகத்துத் தமிழாராய்ச்சித்துறைத் தலைவர்.

பட்டினப்பாலை என்பது பத்துப்பாட்டு என்னும் தொகுதியில் ஒன்பதாவது செய்யுள். இதற்குப் பாட்டுடைத்தலைவன் சோழன் கரிகாற்பெருவளத்தான். இதனைப் பாடியவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார். இது 301-அடிகளாலாயது. இந்நூலின் பெருமையைப் பாட்டுடைத்தலைவனாகிய கரிகாலன் உணர்ந்து 16-கோடிப்பொன் கண்ணனாருக்கு அளித்தான் என்று சொல்லப்படுகிறது.

'தத்து நீர்வரால் குருமி வென்றதும்
தழுவு செந்தமிழ்ப் பரிசில் வாணர்பொன்
பத்தொ டாறுநூ றாயிரம் பெறப்
பண்டு பட்டினப் பாலை கொண்டதும்'

(இராசபாரம்பரியம்-21)

என்று கலிங்கத்துப்பரணி கூறும். சங்கரசோழனுலாவிலும்,

'பாடிய பாக்கொண்டு பண்டு பதினாறு
கோடி பசும்பொன் கொடுத்தோனும்' (10)

என இச்செய்தி குறிக்கப்பட்டுள்ளது. பிற்காலத்ததாகிய தமிழ் விடுதூதும்,

'பாடியதோர் வஞ்சிநெடும் பாட்டாற் பதினாறு
கோடிப்பொன் கொண்டதுநின் கொற்றமே' (193)

என்று கூறுகிறது. இச்செய்தியே இதுவரை அறியப்பட்டது. இப்பொழுது புதுச்செய்தியொன்று சாஸனத்தால் வெளியாகின்றது. பட்டினப்பாலையை அரங்கேற்றுதற்குப் பதினாறுதூண்களமைந்த பெரிய மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது என ஓர் சாஸனச்செய்யுள் தெரிவிக்கிறது. அச்செய்யுள் வருமாறு.

'வெறியார் தளவத் தொடைச்செய மாறன் வெகுண்டதொன்றும்
அறியாத செம்பியன் காவிரி நாட்டிலராமியத்துப்
பறியாத தூணில்லை கண்ணன்செய் பட்டினப் பாலைக்கன்று
நெறியால் விடுந்தூண் பதினாறுமே யங்கு நின்றனவே.

இச்சாஸனம் திருச்சிஜில்லாவிலுள்ள திருவெள்ளறையிற் செதுக்கப்பட்டுள்ளது. இன்றுகாறும் இது வெளியிடப்படாதது. இதில் சுந்தரபாண்டியனுக்கும் மூன்றாம் ராஜராஜனுக்கும் நிகழ்ந்த போர் ஒன்றனைக் குறித்துக் கூறப்பட்டுள்ளதென்பது சரிதஆராய்ச்சியாளர்சிலரின் கருத்து.

இச்செய்யுளில் கண்ணன் என்றது கடியலூர் உருத்திரங்கண்ணனாரை. ஆமியம் என்றது அரண்மனையை. இங்குக் குறித்த போர்நிகழ்ச்சியால் அரண்மனைப்பகுதிகளிற் பதினாறுகால்மண்டபம் ஒன்று தவிர ஏனைய அனைத்தும் அழிவுற்றன. மிகப்பூர்வகாலத்தே பட்டினப்பாலை அரங்கேற்றிய மண்டபமாதலானும், அதற்கு அழிவுசெய்யின் ஓர் தமிழிலக்கிய ஞாபகச்சின்னத்தை அழித்ததாக முடியும் ஆதலானும், அது அழியாது பாதுகாக்கப்பட்டது போலும். இதனால் தமிழிலக்கியச்சின்னங்களை நமது மூதாதையர் எவ்வாறு போற்றிவந்தனர் என்பது விளங்கும்.

இனி, பட்டினப்பாலைக்கும் பதினாறு என்ற தொகைக்கும் ஓர் இயைபிருத்தல் நோக்கத்தக்கது. பதினாறுகோடிப்பொன் இந்நூற்குப் பரிசிலாக வழங்கப்பட்டதென்பது வரலாறு. பதினாறு தூண்களுள்ள ஒரு மண்டபத்தின்கண் இந்நூல் அரங்கேற்றப் பட்டதென்பது இச்சாஸனத்தாற் புதுவதாக அறியப்படும் ஓர் வரலாறு. ஒருகால் பதினாறு கோணங்களிலும் தூண்கள் நிறுவி, ஒவ்வொரு தூணிலும் சில பொற்காசுகளைத் தூக்கியிட்டுப் பதினாறு கோடிப்பொன் என அவற்றை வழங்கினர் என்று நாம் கொள்ள லாம். இங்கு, பதினாறுகோடிப்பொன் என வந்துள்ளதும், பதிற்றுப் பத்தில் காப்பியாற்றுக்காப்பியனாருக்கு 40-நூறாயிரம் பொன்னும் காக்கைபாடினியார் நச்செள்ளையாருக்கு 9-துலாம் பொன்னும் நூறாயிரம் பொற்காசும், கபிலருக்கு நூறாயிரம் பொற்காசும், அரிசில்கிழாருக்கு ஒன்பதுநூறாயிரம் பொற்காசும், பெருங்குன் றூர்கிழாருக்கு 32-ஆயிரம் பொற்காசும் பரிசிலாக அளிக்கப் பட்டன என வந்துள்ளனவும் உயர்வுநவிற்சியென்றே நாம் கொள்ளுதல்வேண்டும். இராசராசன் உலாவின் கண்ணிதோறும் ஆயிரம்பொன் சொரிந்ததாகக்கூறுவதும் உயர்வுநவிற்சியாகவே கொள்ளத்தகும்.

> 'தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
> கொள்வர் பயன்றெரிவார்' (குறள்-104)

என்ற திருக்குறளைப் பின்பற்றி இவ்வாறு புனைந்துகூறினார்கள் போலும். அன்றியும், முற்காலத்தில் ஒவ்வொருசிற்றரசரும் தம் நாட்டில் உள்ள யானை முதலியவற்றைப் பரிசிலாக வழங்கிவந்தனர். இதற்குமாறாகப் பொன்னை வழங்கத்தொடங்கியது புலவர்களுக்கு எத்தனையோ அருமையாகத் தோன்றியிருத்தல்வேண்டும். இவ் வருமைப்பாட்டினைத் தெரிவித்தற்கு இவ்வுயர்வுநவிற்சி ஆளப்பட் டது எனக் கொள்ளுதலும் தகும்.

இது எவ்வாறாயினும் மேற்குறித்த சாஸனச்செய்யுள் ஓர் அரிய இலக்கியவரலாற்றை உணர்த்துகின்றது என்பதற்கு ஐயமில்லை.

கம்பராமாயணசாரம்

உத்தரகாண்டம்

[ராவ்ஸாஹிப். ஸ்ரீ. வெ. ப. சுப்பிரமணியமுதலியாரவர்கள் G.B.V.C.]

கஎ0-ஆம்பக்கத் தொடர்ச்சி.

சந்திரகேதுநகர்ப்படலம்.

இலக்குமணன்மக்கள் அங்கதன் சந்திரகேது, இராமன்குமாரர் குசன் லவன் ஆகியவர்களுக்கு முடிசூட்டி அரசாளவைத்து இராமனும் அவன் சகோதரர்முதலியோரும் மேலுலகஞ்சென்றதைக் கூறுவது.

இலக்குமணகுமாரருக்கு முடிசூட்டல்

பரதன் தன்மக்களிருவருக்கும் இரண்டு ராசதானிநகர்கள் சமைத்து நாடாளவைத்ததைக் கூறக்கேட்ட இராமன், அவனை நோக்கி, 'இலக்குமணன்மக்கள் அங்கதன் சந்திரகேது இருவரையும் அரசாளவைப்பாயாக' என்று பணித்தான். பரதன் இருவருக்கும் மணிமுடிசூட்டினான்.

இலக்குமணன் காரகாபதி யென்னும் நகரமைத்து அதிலிருந்து அங்கதனை அரசாளவைத்தல்

பின்பு பரதன், தேர்ப்படை முதலிய நாற்படையோடும் அங்கதனோடும் சென்று இராசதானிநகரமைக்கும்படி இலக்குமணனை அனுப்பினான். இலக்குமணன் அங்கதனோடு தேரேறிச் சென்று காரகாபதி யென்னும் நகரை அமைத்தான். அது நாகராசனான ஆதிசேடன் அரசாளும் நகரமோ, சூரியன் முதலிய

திக்குப்பாலகர்நகரமோ, சித்தர்நகரமோ, இந்திரனுடைய அமராவதிநகரமோ, குபேரனுடைய அளகாபுரியோ என்னும்படி இருந்தது. இலக்குமணன், அந்த நகரத்தில் அங்கதனை அரசாளவைத்து அயோத்திக்குத் திரும்பிவந்து இராமனை அடிபணிந்து தான் செய்ததைத் தெரிவித்தான்.

பரதன், சந்திரகாந்தையென்னும் நகரமைத்து அதிற் சந்திரகேதுவை அரசாளவைத்தல்

'சந்திரகாந்தநாட்டிற் சந்திரகாந்தை யென்னும் நகரமைத்து அதிற் சந்திரகேதுவை அரசிருக்கச்செய்' என்று இராமன் பணித்தான். பரதன், சந்திரகேதுவுடன் நாற்பெருஞ்சேனை சூழத் தேரேறிச்சென்று பாலை குறிஞ்சி முல்லை நிலங்களைக் கடந்து மருதவைப்பாகிய சந்திரகாந்தநாட்டை அடைந்தான். அங்கே சந்திரகாந்தை என்று ஒரு நகரைச் சமைத்து, அதிற் சந்திரகேதுவை அரசாளவைத்து அயோத்திக்குத் திரும்பிவந்து இராமனை அடிபணிந்து தான் செய்ததை விண்ணப்பித்தான்.

எமன் முனிவேடம்பூண்டு இராமனையடைதல்

அதற்குப்பிறகு, நான்குவருடம் கழிந்தபோது எமன், முனிவேடம்பூண்டு, இராமனுடைய அரண்மனைவாசலையடைந்தான்.

உடுத்த உடையினரும் இறுக்கிய கச்சையினரும் பிடித்த பிரம்பினரும் வளர்த்த தாடியினரும் இடித்த சொல்லினரும் கொதித்த நோக்கினருமான வாசற்காப்பாளரை நோக்கி, 'ஒரு முனிவன் வாசலிற் காத்திருக்கிறான்' என்று அரசனுக்குச் சொல்லுங்களென்றான். அவருள் ஒருவன்சென்று முனிவன் மொழிந்ததை விண்ணப்பித்தபோது, இராமன், 'அம்முனிவனை அழைத்துவா' என ஆஞ்ஞாபித்தான். முனிவேடம்பூண்ட யமன் வந்து தன்னைக் கண்டபோது இராமன், 'உன்னை ஒப்பார் உலகில் ஒருவருமிலர். உலகைப் படைத்த பிரமதேவனே உன்னை ஒப்பான். உன்பேர் யாது?' என, எமன், 'உனக்குத் தனித்து உரைக்கவேண்டியதொன்றுள்ளது.

'இங்கே எவரும் வாராதபடிசெய்தல்வேண்டும்' என, இராமன் இலக்குமணனைநோக்கி, 'இங்கு எவரும் வாராதபடி நீ வாசலினின்று காப்பாயாக' என்றான். பின்பு, இராமன் எமனை நோக்கி, 'இனி நீ கூறக்குறித்ததைக் கூறுக' என்றான்.

எமன் இராமனை நோக்கிப் 'பிரமன், "தேவர்களாலும் என்னாலும்வெல்லமுடியாதவனும், கைலைமலையைத் தூக்கியெடுத்த பலவானும், சங்கரனிடம் வாளாயுதம்பெற்றவனும், சூரிய சந்திரர் நேராக மேலே செல்லாமல் விலகிச்செல்லும் உயர்வுடைய மதிலிலங்கைக் கிறைவனுமான இராவணனைக் கொல்வதற்காகச் சூரியகுலத்திலே அவதரித்தாய். அவதரித்தகாரியம் (இராவணவதம்) நிறைவேறி விட்டது. நீ உன் உலகத்துக்குத் திரும்பிவந்தருளல்வேண்டும் என்று இராமனிடம் கூறுவாயாக" என்று என்னை உன்னிடம் அனுப்பியிருக்கிறான்' என்றான்.

துருவாசமுனிவரவு

அப்போது, அத்திரிமுனிவன்புத்திரனான துருவாசமுனிவன், இராமனுடைய அரண்மனைவாசலையடைந்து, அங்கே காவலாய் நின்ற இலக்குமணனைநோக்கி, 'ஒரு முனிவன் வாசலிற் காத்திருக் கிறானென்று இராமனிடம் தெரிவிப்பாயாக' என்று கூறினான். இலக்குமணன், வணங்கி, 'நீ இராமனிடம் கூறக்குறித்திருப்பதை என்னிடம் கூறுக. நான் அதை யாதொருகுறைவுமின்றி நிறைவேற்றுவேன்' என்று கூறினான். முனிவன் கோபங்கொண்டு, 'என்வரவை உன் தமயனுக்குச் சொல்லாயானால் உங்கள்குலம் விரைந்து விநாசமடையும்படி சபிப்பேன்' என்றான்.

அந்த முனிவரவை இலக்குமணன் இராமனுக்குத் தெரிவித்தல்

(தன் அழிவைப் பொருட்படுத்தாத) இலக்குமணன், (தன் னுயிருக்குயிரான இராமனையுள்ளிட்ட) சூரியகுலம் நாசமாவதற் கஞ்சி, எமன்கூறுவதைக் கேட்டுக்கொண்டிருக்கும் இராமனிடம், ('எவரும் வாராமல் தடுத்திடுக' என்ற ஆணையைமீறிச்)சென்று அடி பணிந்து 'ஒரு முனிவன் வாசலிற் காத்திருக்கின்றான்' என்றான்.

இராமன் "இங்கே வந்திருக்கிறவனை அனுப்பிவிட்டுவருவேன் என்று சொல்" என்று சொல்லியனுப்பினன்.

இராமன் துருவாசனை வரவேற்றல்

இராமன் எமனுக்கு விடைகொடுத்தனுப்பிவிட்டுத் துருவாச முனிவனை வரவேற்று வணங்கி, 'நான்குவேதமும் (ஒருருக்கொண்டு) வந்தாற்போல, அடிகள் அடியேன் அகத்துக்கு வந்தகாரியம்யாது?' என்றான். முனிவன், 'உன் முன்னோர் முதன்முதலாக முடிசூடிய நாள்தொட்டு ஓராயிரஆண்டுக்கு ஒருமுறை உங்கள் அரண்மனைக்கு வந்து யான் விருந்துண்டுசெல்வதுண்டு. இந்தநாள் அந்த முறைநாள்' என்றான்.

துருவாசன் விருந்துண்டுசெல்லல்

இராமன் சமையற்காரரைத் தருவித்து 'முனிவனுக்கு விருந்தூட்டுதற்கு உங்கள் கைத்தொழிற்றிறம் விளங்கும்படி சமையல் செய்யுங்கள்' என்று கட்டளையிட்டான். அவர்கள், செம்பு பித்தளை முதலிய மற்றைய உலோகபாத்திரங்களைக் கையாளாமல், பொற்பாத்திரங்கள் வெள்ளிப்பாத்திரங்களைமட்டும் எடுத்துத் துப்புரவாக விளக்கித் தண்ணீர்கொண்டுவந்து பொற்சாடிகளில் நிரப்பித் தூசி விழாதபடி தூய தூசு (துணி) கொண்டு மூடினார்கள். அடுப்பிலுள்ள சாம்பலை அகற்றிச் சந்தனக்கட்டையையும் அகிற்கட்டையையும் விறகாக அடுக்கித் தீமூட்டி எரியவிட்டார்கள். உரலிலிட்டு உலக்கையால் நன்றாகக் குத்தி நொய்நீங்கப் புடைக்கப்பட்டு முனைமுறியாத அரிசியை உலையிற்பெய்து துடுப்புக்கொண்டு துழாவிப் பதமாக வடித்தார்கள். அறுசுவைக்கறிகளாக்கி நெய்யில் தாளிதஞ்செய்தார்கள். பசுவின்நெய்யை முறுகாமற் பதமாகக் காய்ச்சினார்கள். பாலை நீர்வற்றிக் குறுகக் கொதிக்கவைத்தார்கள். நன்றாகப்பழுத்த வாழை பலா மாவின்கனிகளும் சேகரித்துவைத்தார்கள். எல்லாம் சித்தமானபின்பு சமையல் முற்றுப்பெற்றதை இராமனுக்கு அறிவித்தார்கள்.

இராமன் துருவாசமுனிவனை விருந்தருந்தும்படிவேண்டிக் கொள்ள, முனிவன், தரையிலிட்ட ஆசனத்தில் அமர்ந்து கைகழுவியபின், பரிசாரகர் பொற்பரிகலத்திற் பலவகையுணவுகளைப் படைத்தார்கள். அவன் மந்திரவிதிப்படி கையில் நீர்பெய்து வலமாகச் சுற்றிக் குடித்தபின் அமுதருந்தினான். போசனமுடிவில் உத்தராபோசனஞ்செய்து, அரசர் பொற்கரகத்திலிருந்து கங்கை நீர்வார்க்கக் கைகழுவினான். பின்பு பரிசாரகரைநோக்கி "உங்கள் சமையற்றொழிற்சாதுரியம்போன்ற சாதுரியத்தை நான் எங்கும் கண்டதில்லை" என்று பாராட்டினான். பின்பு இராமனிடம் விடை பெற்றுச்சென்றான்.

இலக்குமணன் பிரிவுக்கு இராமன் வருந்தல்

இராமன் தன்னை மேலுலகத்துக்குத் திரும்பிவரும்படி எமன் கூறியதை யெண்ணியும், (அவனுடன் பேசிமுடியுமுன் யாரையும் வரவிடக்கூடாதென்ற தன் ஆணைகடந்து இடையில் தன்னிடம் வந்ததுகாரணமாக என்றும் பிரியாத தன்னை) இலக்குமணன் பிரியத்துணிந்ததை நினைந்தும் கண்கள் நீர் சொரியக் கலங்கி வருந்தித் துன்பக்கடலுள் ஆழ்ந்திருந்தான். அப்போது இலக்குமணன், இராமனை அடிபணிந்து, '(தவறாகக்) கைகேயிக்கு வரங்கொடுத்தது காரணமாகச் சக்கரவர்த்தி தன்னுயிரை எமனுக்கீந்தான். அது போல, (த் தவறாக) உன் ஆணையைமீறி உன்னிடம் வந்த என்பிழைக்குக் கழுவாயாக (—பிராயச்சித்தமாக) நான் என்னுயிரை எமனுக்கீவதைப்பற்றி வருந்தாதே. விடையருள்வாயாக' என்று வேண்டினான். இராமன் தன் நிழல்போலத் தன்னைப் பிரியாதிருந்த தம்பி பிரிதலுக்கு வருந்தி மயங்கினான்.

இராமன் சபைகூட்டி ஆலோசித்தல்

இராமன் அயோத்திநகரமாந்தரையும் வசிட்டனையும் அழைத்துவரும்படி தூதரை ஏவ, அவர்கள் அவர்களை இட்டுவந்தார்கள். அவர்களைநோக்கி, இராமன், தன்னை மேலுலகத்துக்குத் திரும்பிவரும்படி பிரமன் பிரார்த்திக்கின்றானென்று எமன் கூறிய

தையும், தான் எமனோடு பேசிக்கொண்டிருக்கும்போது, துருவாச முனி வந்ததையும், எமனை அனுப்புமுன் ஒருவரும் வரக்கூடாதென்று தான் இட்டிருந்த கட்டளையைக் கடந்து இலக்குமணன் அம்முனிவனது வரவை அவன் ஆணைப்படி தன்னிடம்வந்து தெரிவித்ததையும், அந்தப் பிழைக்காக அவன் உயிர்துறக்கத்துணிந்திருப்பதையும் கூறினன். வசிட்டன், இராமனைநோக்கி, 'உன் தந்தை தன்னிடம் வந்த துருவாசமுனிவனை முறைப்படி வரவேற்று உபசரித்து அடி வணங்கி, "யான் நெடுங்காலம் இராச்சியபாரந்தாங்கி யிளைத்திருக்கின்றேன். அந்தப்பாரத்தை என்னிடமிருந்து வாங்கிக்கொள்ளும் புத்திரரில்லாத குறையுடையனாயிருக்கின்றேன். அக்குறைதீர யான் செய்யத்தக்கது யாது? கிருபைகூர்ந்து திருவாய்மலர்ந்தருள்க" என்றான். முனிவன் "அசுவமேதயாகஞ்செய்தால், நான்குபுத்திரரைப் பெறுவாய். அவருள் ஒருவனுயிர்பிரியும் போது மற்றை மூவருயிரும் பிரியும்" என்று கூறினன். விதிப்படி நிகழ்வதை விலக்கமுடியாது. ஆதலால் இலக்குமணன் பிரிவுக்காக வருந்தவேண்டாம்' என்று சொன்னான். அப்போது இலக்குமணன், இராமனைநோக்கி, 'நம் குலகுருகூறியதைக் கேட்டாயல்லவா. இனித் தாழாமல் விடையருள்வாயாக' என்று, அகலிகை கல்லுருவத்தை மிதித்துத் தொல்லுருவத்தையடையச்செய்த பாதங்களில் விழுந்து பணிந்தான். தருமத்தின்வடிவமான தம்பியின் பிரிவென்னும் வேல் மருமத்திற் பாயக் கருமத்தின்விளைவென்று கருதிக் கலங்கிப் பெருமத்தன் (—பித்துப் பிடித்தவன்) போன்று, பேசாதிருந்தான்.*

தன்மத்தின் கன்றதாய தம்பிதான் பிரிவென் எஃகம்
மன்மத்தை ஈர்தலாலே மலர்க்கணீர் அருவி சோரக்
கன்மத்தின் விளைவை யெண்ணிக் கட்டுரை ஒன்றுங் கூறான்
உன்மத்த னுயிருந்தான் உணர்வுடன் உயிர்ப்பும் இல்லான்

தன்மம் - தருமம். எஃகம் - வேல். மன்மம் - மருமம் - மார்பு; உயிர்நிலை. கன்மம் - கருமம் - வினை. உன்மத்தன் - பித்தன். உயிர்ப்பு - சுவாசம்.

இலக்குமணன் அயோத்தியினின்று புறப்பட்டுப்போதல்.

அவன், எதிர்மொழி யாதுங் கூறாது உணர்வும் உயிர்ப்பும் (-சுவாசமும்) ஒடுங்கிச் சித்திரப்பாவை ஒத்திருக்கக் கண்டு, இலக்குமணன், அவன் மௌனத்தை அநுமதியாகக்கொண்டு, அவனை அடிபணிந்து நீங்கி அயோத்தியைவிட்டுப் புறப்பட்டுப்போனான். இலக்குமணன்பிரிவால், தன்னைப்பிரிந்த தசரதன்போல, உயிர்ப்பும் உணர்வும் ஒடுங்கிய இராமன், உயிர்நீங்கிய உடலையொத்தான். இலக்குமணன் உடம்பினின்று பிரிந்து வெளியேபோகும் உயிரையொத்தான்.

இலக்குமணன் வைகுண்டம் அடைதல்

இலக்குமணன் அயோத்தியைவிட்டுப்போவதைக் கண்டவர்கள், இவன் இல்லையானால், இராமன் உயிர்தரித்திருப்பானோவென்றும், முன் கைகேசிக்கு வரங்கொடுத்து இராமனைக் காட்டுக்கனுப்பித் தசரதன் இறந்தான்; இப்போது துருவாசன்வேண்டுகோளுக்கிணங்கி, அவன் வரவைத் தெரிவிக்க, இராமன் இயமனிடம் தனித்துப்பேசிக்கொண்டிருக்கும்போது அவன் (இராமன்) ஆணையைமீறிச்சென்றதற்காக இலக்குமணன் உயிர்துறக்கப் போகின்றான். இவன்குலத்தவருக்கு வரங்கொடுத்து மரித்தல் இயல்பாகிவிட்டதென்றும் இவன் இறந்தபின் நாம் உயிரோடிருப்போமோவென்றும் புலம்பினார்கள். சனங்கள் இவ்வாறு பரிதாபமடைவாராக, இலக்குமணன், சரயுநதியை அடைந்து இராமன் முதலியோரெல்லாரும் துன்பத்துள் முழுக, அந்த நதியுள் முழுகினவன், பிறவிப்பெருங்கடற்கரையேறினாற்போலக் கரையேறி ஐம்புலன்களையும் அகத்துள் அடக்கி யோகத்தில் அமர்ந்தான்.

அப்போது, அவனெதிரே தேவேந்திரன் தேவவிமானமீது வந்து, தன்னை வென்று இந்திரசித்தென்று பேர்பெற்ற மேகநாதனைக் கொன்ற நன்றியுணர்வுடையனாய் (தேவசரீரம்போல அழியாமையுற்ற) பூதசரீரத்துடனே அவனைத் தன் விமானத்திலேற்றி வானோர் புடைசூழச் சென்று வைகுந்தம் சேர்த்தான்.

இராமன் இலக்குமணனையெண்ணி யிரங்கல்.

இலக்குமணனது பிரிவுத்துயரால் உணர்வும் உயிர்ப்பும் ஒடுங்கியிருந்த இராமன், தெளிவுற்றபோது, விழித்துப்பார்த்தான். எதிரிலிருந்த இலக்குமணனைக் காணாமையால், பதை பதைத்து உள்ளம் வியர்க்க உடம்பு மெலிந்து, 'என்னை, நெடுங்காலம் காத்த நீ இப்போது கைவிட்டாயோ?' என்று கண்ணீர்வடித்துப் புலம்பினான். * '(இந்திரனை வென்று, இந்திரசித்தென்று பேர் பெற்ற அதிவீரனான) மேகநாதனை ஓர் அம்பினாற் கொன்றாய்! அவிவேகியான அருவினையேனுடைய ஆருயிரே! ஒருதானே தம்பியும் நண்பனுமான) தம்பித்துணையே! (உன்னைப்பிரிந்து) உயிர்தரியேன்! (ஒரு கணமும்) தரியேன்! † என் அரசே! என் உயிரே! என் அருமைத்தம்பியே! அடைக்கலம் புகுந்த விபீடணனுயிரைக் காக்க, இராவணன் அவன்மேலெறிந்த வேலை மார்பில் ஏற்ற (பிராணத்தியாக மகோபகாரியான)வனே! உன் பிரிவைப் பொறுப்பேனோ' என்று மலைமேல் மழைபெய்தாற்போல மார்பின் மேற் கண்ணீர்பொழிந்து கதறியழுதான்.

---

* பார்த்தான், இளையோனைக் காணான், பதைத்துள்ளம்
வேர்த்தான், திருமேனி யெல்லாம் மெலிவுற்றான்.
காத்தாய் நெடுங்காலம், கைவிட்டா யோவென்று
பூத்தா மரைக்கண் புனலாய்ப் புலம்பினான்.

புனல் — நீர்.

† விம்பக் கவிகை விறன்மேக நாதனையோர்
அம்பிற் றடிந்தாய்! அருவினையேன் ஆருயிரே!
வம்புற்ற தாரான் மகனே! மதியிலியேன்
தம்பித் துணையே! தரியேன்!! தரியேனே!!!

விம்பம் - வட்டம். கவிகை - குடை. விறல் - வெற்றி; வீரம். அம்பில் தடிந்தாய் - அம்பினாற் கொன்றாய். அருவினையேன் - (தீர்தற்கு) அரிய(தீ) வினையுடையேன். ஆருயிர் - அருமையான உயிர். வம்பு - வாசனை. தாரான்- மாலையுடையான் (ஆன தசரதன்). மதியிலியேன்-புத்தியில்லாதேன்.

இராமன் பரதனை முடிசூடும்படி பணிக்க, அவன் மறுத்துக் குசலவர்க்கு முடிசூட்டும்படி கூறல்

'உயிர்போனால் உடலிருக்குமோ? இராது. அதுபோல, என் தம்பி இறந்தபின் யான் உயிர்வாழேன். அவன் சென்ற வழியே செல்வேன். நீ முடிசூடுவாயாக' என்று பரதனை நோக்கி இராமன் கூறினான். பரதன், தலைமேற் கைகூப்பிக் கும்பிட்டுக் கொண்டு, 'உலகத்தைக் காக்குங் கடமை உன்னுடையது' என்று ஏங்கிக்கூறி, இறந்தான்போல, இராமன்காலில் விழுந்து 'எம் பெருமான் என்னை முடிசூடென்றது, கைகேசி தசரதனிடம் கொண்ட வரத்தினும் கொடுமையானது. நீ தாங்குகின்ற இராச்சியபாரத்தை என்மேற் சுமத்துதல், ஆதிசேடனான மாநாகம் தாங்கும் பூமியைப் பூநாகமேல் ஏற்றுதல் போலும்.* புல்லரிசி நெல்லரிசியையும் மின்மினி சூரியனையும் ஒக்குமானால், நான் உன்னை ஒத்தவனாய் உலகாளுதல் கூடும். உன் குமாரரும் உன்னைப்போல் ஆண்மையுடையவருமான குசலவர்க்கு முடிசூட்டுவாயாக' என்று கூறினான்.

---

* அண்ணல் நீபுரந் தாள்கின்ற வையகம்
எண்ணி என்வயின் ஈந்தது தெய்வதம்
நண்ணி நாகம் சுமக்கும்இந் நானிலம்
மண்ணின் நாகம் சுமக்கென மாண்டதால்.

அண்ணல் - பெருமையிற்சிறந்தோன்; தலைவன்; அரசன். புரந்து-காத்து. வையகம் - பூமி. என்வயின் - என்னிடம். தெய்வதம் - தெய்வம்; இங்கே ஆகுபெயராய்த் தெய்வத்தன்மையைக் குறித்தது. 'தெய்விகம்' (-தெய்வத்தன்மை) என்று பாடம் இருந்திருக்கலாம். அதைப் பிரதிசெய்வோர் 'தெய்வதம்' என்றெழுதியிருக்கலாம். நண்ணி-பொருந்தி. மண்ணின் நாகம்-பூநாகம்-நிலப்புழு (Earth worm) -நாங்கூழ்-நாக்குப்பூச்சி. சுமக்கு, முதனிலைத்தொழிற்பெயராய்ச் சுமக்குதலென்ற பொருள் குறித்தது. மாண்டது-சிறந்தது. இங்கே சிறந்ததன்றென்று குறிப்புப்பொருள் தந்து நின்றது.

இராமன் குசலவர்க்கு முடிசூட்டுதல்

பரதன்கூறியதற்கு இராமன் மகிழ்ச்சியுடன் உடன்பட்டுக் குசலவர்க்கு முடிசூட்டுதற்கு முதற்சடங்காகக் காப்புநாண் அணிவித்தான். முரசு சங்கு முதலிய மங்களவாத்தியங்கள் முழக்கப்பட்டு முடிசூட்டுவிழாநாள் எங்கும் தெரிவிக்கப்பட்டது. அரசர் அந்தணர் முதலியோர் கூடினர்கள். யானைகள்மீது பொற் குடங்களிற் கங்கைநீர் கொண்டுவரப்பட்டது. இராமன் குச லவர்க்கு அபிடேகஞ்செய்து அரசர்கள் கைகளைச் சிரமேற்சூட்டி (க் கும்பிட்டு) வாழ்த்த, முடிசூட்டினான்.

இராமன், குசனைக் குசலவதியிலும் லவனைச் சிரப்பதியிலும் அரசாளவைத்தல்

இராமன், கோசலநாட்டிலே குசலவதியென்ற நகரமும் உத் தரகோசலநாட்டிலே சிரப்பதியென்ற நகரமும் சமைத்து முந்திய நகரிலிருந்து குசனும் பிந்தியதிலிருந்து லவனும் நால்வகைச் சேனை யுடையராய் அரசாளும்படி வைத்தான்.

சத்துருக்கன் அயோத்திக்குவருதல்

பின்பு, இராமன் இலக்குமணன்சென்றவழியே நானும் செல்வே னென்பதைச் சத்துருக்கனுக்குத் தெரிவியுங்களென்று தூதரை அனுப்பினான். அவர்கள், அவனிடம் சென்று, இராமனிடம் எமன் வந்தது முதலாக நிகழ்ந்த செய்திகளைத் தெரிவித்தார்கள். அவன் அவர்கள் கூறியதைக் காதுவெதும்பக் கேட்டுக் கருத்துடைந்து கண்ணீர்சொரிந்து மெய் நடுங்கி மெலிந்து சோர்வுற்றான். தன் குமாரரை அழைத்து 'இராமன் திருவடிதொழுதற்கு அயோத்திக் குச் செல்கின்றேன். நீங்கள் இங்கேயிருங்கள்' என்று சொல்லி அவர்களுக்கு முடிசூட்டிச் சிராப்பள்ளி யென்ற புதுநகரமைத்து அதிலிருந்து அவர்கள் அரசாளும்படிசெய்துவிட்டு, அயோத்தியை யடைந்து இராமனை அடி வணங்கி மக்களை மகுடம்புனைந்து அரசாளவைத்துவந்ததைத் தெரிவித்தான்.

விபீடணன் சுக்கிரீவன் முதலியோர் வருதல்

அயோத்தியில் நிகழ்ந்தவைகளை அறிந்து, விபீடணன் சுக்கிரீவன் அனுமான் சாம்பவான் நளன் துமிந்தன் நீலன் மயிந்தன் முதலிய வானரத்தலைவர்கள் வந்தார்கள். இலங்கைப் போர்க்களத்திலே பொருதற்கு வானரராகப் பிறந்திருந்த வானவரெல்லாரும் வந்தார்கள். வந்தவர்களெல்லாரும் இராமனை அடிபணிந்தார்கள். மற்றைய சனங்களும் வந்து கூடினார்கள்.

இராமன், தான் செல்லும்வழிச் செல்லாமல் வாழ்ந்திருக்கும்படி விபீடணனுக்கும் அனுமானுக்கும் கூறுதல்

'நீ இலங்கைக்குத்திரும்பிப்போய் மக்கட்பரப்புள்ளமட்டும் அரசாண்டு சிரஞ்சீவியாய்-வாழ்வாயாக' என்று விபீடணனை நோக்கி, இராமன்கூறினான். அதுகேட்ட சுக்கிரீவன், தன்னையும் இருக்கும்படி பணிப்பதைத் தடுக்கக் கருதி, 'நான் அங்கதனை முடிசூட்டி வந்திருக்கிறேன்' என்று சொல்லி வணங்கினான். இராமன் அனுமானைநோக்கிச் 'சீதை, ('உலகம் எழும் வீவுற்றஞான்றும் இன்றென இருத்தி' என்று, உனக்கு) முன்பு உரைத்திருக்கிறபடியும் உலகில் வாழ்தற்கு உன் கருத்திருக்கிறபடியும், என் ஆணைப்படியும் நீ பூமியில் வாழ்வாயாக' என்று கூறினான்.

இராமன் எல்லாரோடும் சரயுநதியடைதல்.

அன்புப்பிணிப்பால் இராமனைப் பிரியமாட்டாத அயோத்திநகரத்து ஆடவர் பெண்டிர் பிள்ளைகளனைவரும் இராமனிடம் வந்துசேர்ந்தார்கள். இராமன் எல்லாரோடும் அயோத்திநகரைவிட்டுப் புறப்பட்டுச் சரயுநதியையடைந்தான்.

எல்லாமக்களும் நீங்கியபோது சனமற்ற அயோத்திமாநகரம், குறுமுனிகுடித்தபோது நீரற்ற கடல்போன்றது.

பிரமன் பிரார்த்தனை

எல்லாரும் சரயுநதியுள் மூழ்கப்புகுந்தசமயத்தில், பிரமதேவன், எண்ணிறந்த தேவவிமானங்களோடு வானத்துச்சியிலே வந்து தோன்றினன். தோன்றியவன், இராமனை நோக்கி, 'நீ உன் அவதாரத்திருமேனியை அகற்றி உன் பூர்வ தெய்வசொரூபத்துடன் வைகுண்டத்துக்கு வந்தருளவேண்டும்' என்று பிரார்த்தித்தான்.

இராமனும் தம்பியரும் ஒன்றுசேர்ந்து திருமாலாதல்

சரயுநதியுள் முழுகின (திருமாலின் அமிசங்களான) இராமனும் தம்பியரும் எழுந்து ஒன்றாகச்சேர்ந்து திருமாலானார்கள்.

வானரர் தேவராதல்

வானரர் சரயுநதியுள் மூழ்கித் தத்தம் பழைய தெய்வ வடிவங்களை யடைந்தார்கள்.

அயோத்திமாந்தர் தேவராதல்

இராமனும் தம்பியரும் ஒன்றுசேர்ந்தான திருமாலைப் பிரமன் வணங்கியபோது, அப்பெருமான் கட்டளையிட்டபடி பிரமன் அயோத்திமாந்தர்வாழ்தற்குச் சந்தானமென்னும் தேவநகரைச் சிருட்டித்தான். சரயுநதியுள்மூழ்கித் தேவராக எழுந்த அயோத்திமாந்தர்கள், தேவவிமானங்களேறிச் சென்று தமக்கெனச் சமைக்கப்பெற்ற அந்தச் சந்தானநகரை அடைந்து அங்கே வாழ்வாராயினர்.

இராமன் வைகுந்தமடைதல்

திருமாலான இராமன், பிரமனும் பரமனும் இந்திரனும் இமையவரும் ஏத்திப் போற்றி வாழ்த்த வைகுந்தம் சேர்ந்தான்.

கஎ-வது சந்திரகேதுநகர்ப்படலம் முற்றிற்று.

உத்தரகாண்டம் முடிவுற்றது.

கம்பராமாயணசாரம் முற்றுப்பெற்றது.

பண்டைத்தமிழர்

சுவாமி ஞானப்பிரகாசரவர்கள், நல்லூர்.

(கஅரு-ஆம் பக்கத் தொடர்ச்சி)

VIII பரதகண்டத் தமிழர் நாகரிகம்.

இதுகாறும் எடுத்தோதியவைகளால், தமிழர் எனும் திராவிடர், பண்டைநாளில் மத்தியதரைக்கடலைச்சார்ந்த நாடுகளில் வசித்திருந்து ஒரு படித்தான நாகரிகத்தை அடைந்துகொண்டபின் மேற்கிலும் கிழக்கிலும் பரவியவர்களாவர் என்பதும், அன்னோருள் ஒரு கிளையினர்களே இந்தியாவினுட்புகுந்து அங்கு தங்கள் மேலான நாகரிகத்தை நாட்டினார்கள் என்பதும் பல ஏதுக்களைக்கொண்டு ஒருவாறு பெறப்பட்டது. தமிழரானோர் சுமேரியர் எகிப்தியர் அக்கத்தியர் கல்தேயர் ஆதிய மத்தியதரைக்குலங்களோடு ஆதியில் ஒன்றானவர்கள்; ஆகவே, இவர்களது புராதனநாகரிகத்தில் தாங்களும் பங்குகொண்டவர்களாகக் காணப்படவேண்டியவர்களன்றோ? உள்ளபடி, தமிழர் இந்தியாவில் உட்பட்டபோது, அங்கு முன் வந்திருந்தோராகிய மிகக் கறுத்த அநாகரிகமக்கள் அறியாத திருத்தங்களைக் கொண்டுவந்தோராய்க் காலகதியிலே நகரிகளைக் கட்டி அவற்றிற்குரிய நாகரிகத்தைத் துலங்கச்செய்வோராகவே இருந்தனர் எனத்தோன்றும். இவ்வாறு தமிழர் மேன்மேலும் அடைந்துகொண்ட சீர்திருத்தத்தின் பயனாகவே பழைய மோஹேந்சோதரோ ஹரப்பா ஆதிய இந்திய நகரிகளும் உண்டாயின எனல் தகும். எயுபிரேத்தீஸ் தீகிறிஸ் எனும் நதிகளின் செழிப்புள்ள கரைகளைச்சார்ந்து சுமேரியர் ஆதியோரும், நீலநதி ஓரங்களில் எகிப்தியரும் அடைந்துகொண்ட பண்டைச் சீர்திருத்தத்தைப் போன்றதே சிந்துநதிக்கரைகளில் வந்து குடியேறிய தமிழருடையதும் என்க.

பழங்காலப் பட்டணங்கள்.

தமிழரது பழைய சீர்திருத்தம், பின்னாளில் நமதுகாலத்தில் 1923ம் ஆண்டுமட்டும் அறியப்படாதிருந்தது. பழம்பொருளாராய்ச்சியாளர்கள், மெசபொத்தாமியாவிலும் எகிப்திலும் புராதனநகரங்களின் புதைபொருள்களை, ஆப்பெழுத்துச் சாசனங்களை ஆராய்ந்து அந்த நாடுகளின் பழஞ்சீர்திருத்தத்தைப்பற்றிப் பல ஆச்சரிய விவரங்களை வெளியிட்டுக்கொண்டிருந்தவர்கள், நாங்கள் இந்தியாவின் சீர்திருத்தம் பழமையானது பழமையானது என்று சொல்ல எங்களை நம்பாமற்போயினார்கள். ஆயினும் 1923-ம் ஆண்டுத் தொடக்கத்தில், R. D. பானர்ஜி எனும் பழம்பொருளாராய்ச்சி உத்தியோகத்தர் சிந்துநதிப்பள்ளத்தாக்கில் மொஹெஞ்சோதரோ எனும் இடத்திலுள்ள ஒரு பாழான புத்தஸ்தூபியின்பக்கத்திலிருந்த சில மண்மேடுகளை

அகழ்ந்துபார்த்தபோது ஒரு தாழ்வில் குஷன்காலத்து நாணயங்கள் சிலவும் இன்னுங்கீழே உருவெழுத்துள்ள ஒரு புராதன "முத்திரை"யும் அகப்பட்டன. அதேகாலத்தில் ஹரப்பாவில் ஆராய்ச்சிசெய்துகொண்டிருந்த இராவ் பகதூர் தயாராம் சஹானி என்பவரும், அங்கே இதுபோன்ற "முத்திரை"களும் மைதீட்டிய மட்கலங்களும் கண்டெடுத்திருந்தார். 1924-ம் ஆண்டு இவற்றை இந்தியப் பழம்பொருளாராய்ச்சியாளர்களின் தலைவராயிருந்த சேர் யோன் மார்ஷல் என்பார் பலுச்சிஸ்தான முதலிய பிறநாடுகளின் புதைபொருள்களோடு ஒப்புநோக்கி, இவற்றின்தொன்மையைப் பத்திரிகைகள் வழியாய் வெளியிடவே அச்செய்தி உலகம் முழுதிலும் உள்ள அறிஞர்களுக்கெல்லாம் ஆச்சரியத்தை விளைத்தது. அதன்பின் பத்துவருஷங்களுக்குள் மொஹெஞ்சோதரோவிலும் ஹரப்பாவிலும் இருபெரிய பட்டணங்களின் அழிவுகள் கிண்டித் திறந்துவிடப்பட்டன. முந்திய பட்டணத்தினுள்ளே, அகலமான வீதிகள், குறுக்குத்தெருக்கள், அவற்றை அண்டிய இல்லிடங்கள் மேல்மெத்தையுள்ள கட்டடங்கள், பொது ஸ்நானகூடங்கள் ஆதிய நாகரிக சீவியத்துக்குரிய எல்லாம் விளங்கின. உருவெழுத்துள்ள நூற்றுக்கணக்கான "முத்திரை"களும் வெளிவந்தன. "முத்திரை"கள் எனும் இவைகள் பெரும்பாலும் மென்மையானகல்விற்செதுக்கிச் சார்நூட்டிச்சுடப்பட்டவை. சில செப்புத்தகடுகளிற் கொத்தப்பட்டவை. மட்கலங்கள், சுட்ட மண்வளையல்கள், பொன்நகைகள், தந்தக்கோல்களிலும் எழுத்துக்கள் உள. பலவடிவமான சுட்ட மண்தகடுகளும் "முத்திரை"களாய்ச் செய்யப்பட்டிருந்தன. எல்லாம் அச்சுப்போலப் பதிப்பதற்குச் செய்யப்பட்டனவல்ல என்பது பலர் கருத்து. இவைகள் பெரும்பான்மை சதுரப்பாங்கானவை. இரண்டு மாத்திரம் சுமேரியாவிற்போலத் திரண்டவடிவுள்ளன. மட்கலம் ஆதியவற்றிற் பதிக்கப்பட்ட பதிவுகளும் உள. பதிவுகள்போக ஏனையவை சம்பவங்களைக்குறிக்கும் சாசனங்களே என்பது ஹிறஸ் சுவாமியாரின் துணிபு. இங்குக் கண்டெடுத்தனபோன்ற சதுரப்பாங்கும் இந்திய உருவெழுத்துங்கொண்ட "முத்திரை"கள் பன்னிரண்டுக்குமேல் சுமேரியாவிலே ஊர், கிஷ், தொல் அல்மர் எனும் இடங்களில் அகப்பட்டன. அச்சீர்திருத்தம் கி. மு. ஏறக்குறைய மூவாயிரம்வருஷங்களுக்கு முற்பட்டதாம் என்பது சேர் யோன் மார்ஷல் ஆதிய மேதாவிகளின் கருத்து.

அகழ்ந்து காணப்பட்ட மொஹெஞ்சோதரோ ஹரப்பா எனும் இரண்டு பட்டணங்களுக்கும் சேர்ந்த எல்லாப்பாகங்களும் இதுவரையில் பரிசோதித்துமுடியவில்லை. அல்லது இவைகள்மட்டுந்தான் இன்றைக்கு ஐயாயிர ஆண்டுக்கு முற்பட்ட ஒரு மகாசீர்திருத்தத்தைக் காட்டுகின்றவை

என்று சொல்லிவிடவும்போகாது. ஏனெனில், இவைகளைப்போலப் பல பழம் பட்டண அழிவுகள் இன்னும் மண்மேடுகளின்கீழ் மூடுண்டுகிடக்கின்றன என்பது ஆராய்ச்சியாளர்களது முடிவு.* ஹரப்பா என்னுமிடம் மொஹெஞ்சோதரோவுக்கு வடக்கே சுமார் நானூறுமைல்தூரத்திலுள்ளது. இவை இரண்டுக்கும் இடையில் இன்னும் பல இடங்களிற் பழம்புதைபொருள்கள் காணப்பட்டன. பஞ்சாப்புக்கு வடக்கே Kotla Nihang கொட்ல நிஹங்கி லும் அவ்விதப்பொருள்கள் கிடைத்தன. தெற்குச்சிந்துவுக்கும் வடக்குச் சிந்துவுக்கும் இடையிலுள்ள பழைய பாதையை அண்டிய மலைப்பிரதேசங் களிலும் பல புராதன நிலையங்களை N. G. மஜூம்தார் எனும் ஆராய்ச்சி யாளர் கண்டுபிடித்தார். சமீபகாலத்திலே சிந்துநதியின் கீழ்கரையிலுள்ள (Khairpur) கயிர்ப்பூர் இராச்சியத்திலும் கத்தியவாரைச்சேர்ந்த (Limbdi) லிம்டியிலும் சிந்துவெளிநாகரிகத்துக்குரிய பழம்பொருள்கள் அகழ்ந்தெடுக் கப்பட்டன. கயிர்ப்பூரின் நாகரிகம் மொஹெஞ்சோதரோவுக்கு முந்தியது மாகலாம் என்பது சிலர்கருத்து. சிந்துநதியின் கிழக்குக்கரையில் (Chanhudaro) சங்குதரோ எனும் ஒரு பழம்நிலையத்தை ஒரு அமெரிக்க சங்கத்தார் கிண்டிப் பல பழம்பொருள்களை எடுத்தார்கள். அவைகளும் மொஹெஞ்சோதரோ நாகரிகத்தைச்சேர்ந்தவைகள். அவற்றுள் வழிபா டடைந்த ஒரு மாத்தின் உருவமும் ஆட்டின் உருவமும் விசேஷகவனத்துக்கு உரியவை; சிந்துநதியின் மேற்குக்கரையில் பயரோ கொத் (Piaro Gott) புகைரதஸ்தானத்துக்கணித்தாயிருக்கும் லொகுஞ்சோதரோ (Lohunjo Daro)விலும் ஓர் மேட்டின்கீழ்ப் பழைய நாகரிகப்பொருள்கள் கிடைத்தன. பின்னும் அலிமுறட் (Ali Murad) எனும் கிராமத்துக்கு அணித்தாகவுள்ள ஒரு இடமும், (Manchar Lake) மன்சர்வாவியடியிலுள்ள வேறொரு மண் மேடும் இவ்வாறே பழங்கால நாகரிகத்தை மூடிக்கொண்டிருக்கின்றன. அப்பால் கங்கைநதிப்பள்ளத்தாக்கிலும் பழங்காலத்துச் செப்பாயுதங்கள் கண்டெடுக்கப்பட்டன. அவைகள் தோற்றிய இடங்களைப் பரிசோதிக்குங் கால் சிந்துநதிப்பள்ளத்தாக்கிலோடு ஒற்றுமைகொண்ட ஓர் சீர்திருத்தம் வெளிப்படும் என்பர். ஏனெனில், கல்லாயுதங்கள் சிறுபான்மையும் செப் பாயுதங்கள் பெரும்பான்மையும் சேர்ந்ததே சிந்துநதிப்பள்ளத்தாக்கின் பழம் நாகரிககாலமாம். கங்கைநதிப்பள்ளத்தாக்கின் கீழ்பாகத்தில் கசிப் பூரிலும் காசியிலும் வெளிப்பட்ட செப்பாயுதங்களோடு உருவெழுத்துள்ள பொருள்களும் பவளத்தில் அறுத்துச்செய்த மணிகளும் சிந்துநதிப்பள்ளத் தாக்குப்பொருள்களோடு ஒத்தகாலத்தனவாகின்றன. ஆகவே, வடமேற் கிந்தியாவின் நாகரிகம் வடகிழக்குவரையும் பரந்திருந்தது என்றாகின்றது.

---

* K. N. Dikshit: Prehistoric civilization of the Indus Valley p. 7 &c,

அதுமட்டோ! இந்த நாகரிகம் கருமதை, தப்தி ஆற்றுப் பள்ளத்தாக்குகளி லும் ஒருநாள் காணப்படும் என்பர். அதுமட்டோ! மொஹெஞ்சோதரோ வின் பெண்பாலார் பிரீதியோடு அணிந்துவந்த வளையல்கள் அறுத்த சங்கு காணப்பட்டஇடம் சென்னைமாகாணப்பிரிவின் தென்கிழக்குக்கோடியாகிய திருநெல்வேலிப்பிரதேசமே. ஆதலால், அங்குள்ள கொற்கை ஆதிய பழைய நிலையங்களில் சிந்துநதிப்பள்ளத்தாக்கின் சீர்திருத்தத்தை அடுத்த ஒன்றின் அடையாளங்கள் ஒருகாலம் கண்டுபிடிக்கப்படாமற்போகா என்பது ஆராய்ச்சியாளர்களது நம்பிக்கை, ஐதராபாத்திலும் திருநெல்வேலிப்பாகங் களிலும் உருவெழுத்துத்தீட்டிய பழைய மட்பாண்டங்கள் ஏலவே கண் டெடுக்கப்பட்டன. இலங்கையிலும் அவ்வெழுத்துக்கொண்ட பழைய நாணயங்கள் வழங்கினவெனக் காட்டுவர் ஹீறஸ் சுவாமியார். எம் தீவிலே கேகாலையிலிருந்து எட்டு ஒன்பது கட்டை தூரத்திலுள்ள எதுபதே எனும் ஒரு குகையிலும் அவ்வித எழுத்துக்களைத் தாம் கண்டதாக அவரே குறிக் கின்றார்.*

சிந்துவெளி நாகரிகம் இந்தியாவிலும் இலங்கையிலேதானும் பண்டை நாட் பரந்திருந்தமை ஒருபுறமகிடக்க; அது இந்தியாவில் வந்திறங்கியபாதை யும்அறிஞர்களால் ஆராயப்பட்டுள்ளது. அந்த நாகரிகம் பிறநாகரிகங்களோடு தொடர்பில்லாமல் தனியே எழுந்ததுமல்ல; எழுந்திருக்கத்தக்கதுமல்ல. அது தமிழருடைய ஆதியிருப்பிடங்களிலே மூளைத்து அரும்பி, வழிவழியேபோதாகி ஈற்றில் இந்தியாவில் மலர்ந்த ஒரு நறுமணங்கமழும் பூவாகும், சேர் ஸ்ரேயின் (Sir Aurel Stein) எனும் பழம்பொருளாராய்ச்சிநிபுணரின் தளரா முயற்சி யால் பலுச்சிஸ்தானிலும் தென்பாரசீகத்திலும் சிந்துநதிப்பள்ளத்தாக்கிற் கண்டசாயலான அக்காலத்துக்குரிய வர்ணந்தீட்டிய மட்கலங்களும் வேறு பல பழம்பொருள்களும் அகழ்ந்தெடுக்கப்பட்டன. மலையாட்டின் உருவம் வரையப்பட்ட மட்கலங்களும் இந்தியாமுதல் சுமேரியாமட்டும் உள்ள மாதிரிகளாம் பலாக்காய் முள்ளுப்போலச் சூளையில் வைத்துச்செய்யப்பட்ட கலங்கள் இருக்கின் மேற்பாகத்திலே தெல் அஸ்மர் எனும் இடத்திற் கண் டெடுத்தவை போன்றவை. இவற்றால் மேற்கே சுமேரியர் இலாமித்தரும் கிழக்கே தமிழரும், அந்நாட்களிலே தம்முட் கலந்து ஒரேபடித்தான சீர் திருத்தத்தை வளர்த்துவந்தனர் என்பது புலனாகின்றது. † ஐயாயிரத்துக்கு மிகமேற்பட்ட ஆண்டுகளின்முன், தமிழர் தங்களோடு இனங்கொண்டவர் களைவிட்டுச் சற்றுச்சற்றாய் மெசப்பொத்தாமியாப்பாகங்களை நீங்கி, இருக்கி னூடாய்த் தென்பாரசீகத்தில் இறங்கிப் பலுச்சிஸ்தானத்திலும் தங்கி, அப் பால் இந்தியாவைச்சேர்ந்து முந்திய இருப்பிடங்களுக்கும் இப்புது இருப்பிடத்

*Journal of the Royal As Soc C. B. Vol. XXXIV, p. 44 & seq.
† Dikshit, op. Cit p. 11

துக்கும் பொதுவான ஒரு நாகரிகத்தை நாட்டிச் சீருஞ் சிறப்பும் சமாதானமுமாய் வாழ்ந்துவரக் காண்கின்றோம். பின்பு ஆரியர் எனும் வேற்றுக்குலத்தார் இவர்களது பழைய இருப்பிடங்களிலும் இந்தியாவிலும் வேறொருவகையான போர்க்கோலமான சீர்திருத்தத்தோடு உட்புகுந்து, நிலத்தரசர்களைத் துரத்தியடித்து அவர்கள் நகரங்களையழித்து அவர்களது பழமையும் செம்மையுமான சீர்திருத்தத்தைக் குலைத்துவிட்டுத் தாம் இடங்கோலிக்கொண்டனர். இதுவே ஒரு வார்த்தையில், பிற்காலம் தமிழர் தாழ்ந்து ஆரியர் மேற்பட்டவரலாறு.

இவை இவ்வாறிருப்ப, சிந்துநதிப்பள்ளத்தாக்கின் சீர்திருத்தம் இந்தியருடையதல்ல, பிறதேசத்திலிருந்து வியாபார நிமித்தமாய்க் குழுமியிருந்தவர்களுடையது என்று சிலரும், ஆரியருடையதென்று வேறு சிலரும் தடை சொல்வார்களே, அதற்கு விடை யாது? எனில் கூறுவோம். வியாபாரத்தின் நிமித்தம் குழுமிய பிறதேசத்தவர்களின் நாகரிமே மொஹெஞ்சோதரோவிலும் ஹரப்பாவிலும் உள்ளதென்றால் இந்தியாவில் வேறு இடங்களின் நாகரிகம் யாருடையது? ஆயினும், சிந்துநதிப் பிரதேசத்திலிருந்த பிற பட்டணங்களுள் மொஹெஞ்சோதரோ ஒரு தலைப்பட்டணமாயிருந்தது எனவும், அங்கு பிறதேசத்தவர்களும் வந்திருந்தார்கள் எனவும் சொல்லுதல் அமையும். உள்ளபடி அங்கு கண்டெடுக்கப்பட்ட மண்டையோடுகளிற் கூடிய தொகையானவை நெடுந்தலைகொண்ட மத்தியதரைக்குலத்தவர்களுடையனவே. ஆயினும், அவுஸ் திறோ-ஆசிய குலத்தவர்களுடையன சிலவும் மத்திய ஆசிய சமபூமிகளின் பரந்ததலைமக்களின் மண்டையோடுகள் சிலவும் இருந்தன என ஆராய்ச்சியாளர் கூறுவர். ஆகவே அந்நகரில் இற்றைநாளிற் பம்பாய் ஆதியவற்றிற்போல வெவ்வேறு பிறசாதியார் போக்கு வரவு செய்வோராயிருந்தமை பிரசித்தம். ஆயின் மொஹெஞ்சோதரோவின் சீர்திருத்தம், இந்தியாவின் அக்காலப் பட்டணங்கள் பலவற்றின் சீர்திருத்தத்தோடு ஒன்றானதாகையால் அது சுதேசிகளுடையதேயன்றிப் போக்குவரத்தானவர்களுடையதல்ல என முடிக்கப் போதிய நியாயமுண்டு.

இனி, மொஹெஞ்சோதரோ ஹரப்பாப்பட்டணங்கள் ஆரியருடையன எனக் கூறுதலும் பொருந்தாது. ஏனெனில் ஆரியர் இந்தியாவினுள் இறங்கியது இ. மு. 1500 வரையிலாம் என்பது பல ஏதுக்களைக்கொண்டு முடிந்த ஒரு முடிபு. இப்பட்டணங்களோ இ.மு. 3000வரையில் செழித்தோங்கியவை என்பது பலமேதாவிகளின் கருத்து. அதுமட்டுமன்று. ஆரியருடைய பழக்கவழக்கங்கள் சமயவழிபாடுகளுக்கு முழுதும் மாறானவைகளே அப்பட்டணங்களில் நடைபெற்றமையைக் கண்டோம். ஆரியர் தங்களுக்குமுன் இந்தியா முழுதும் நன்றாய் நிலையூன்றியிருந்து தாங்கள் உள் நுழைவதைத் தடுத்துக்கொண்டிருந்த தமிழரையே தங்கள் இருக்குவேதப்பாடல்களில்

தசியுக்கள் அல்லது தாசர்கள் என்று இகழ்ந்தும், தங்களுக்கு நிலையான பட்டணங்கள் இல்லாதவர்கள் என்று அவர்கள் புரங்களைப்பற்றிப் பேசியும் வருவதைக் காண்கிறோம். புரம் என்றது, கோட்டை என்ற அர்த்தத்தில் அன்னோர் தமிழரிடமிருந்து மேற்கொண்ட ஒரு தமிழ்ச்சொல்லேபோலும். தசியுக்களுடைய புரங்கள் கல்லாற்கட்டி அரண்செய்தவைகள் என்றும் ஆரியர் சொல்வதைக் கேட்கின்றோம் (இருக். 4: 30 20). இவற்றோடு சேர் யோன் மார்ஷலுடைய அறிக்கையடங்கிய மூன்று பெருங்காண்டங்களையும், நாம் கிழக்குச்சீமைகளிலுள்ளார் எவர்க்கும் முன்னே பெற்று வாசித்தவுடன், மொஹெஞ்சோதரோ தமிழருடையது எனக் காட்டிப் பத்திரிகைகளில் ஒரு முக்கிய நியாயத்தை வெளிப்படுத்தினோம். அதுயாதெனில் அந்தப் பட்டணத்தின் பிரசித்தமான லிங்கவழிபாடாம். லிங்கவழிபாடுதான் மொஹெஞ்சோதரோவிலும் ஹரப்பாவிலும் அதிகபிரசித்தமாய்க் காணப்படுவதால் அவைகள் தமிழருடைய பட்டணங்களே என்றும் அந்நாளிற் காட்டினோம். அப்பட்டணத்தாரின் லிங்கவழிபாட்டோடு ஏனைய மர மிருக தெய்வ வழிபாடுகளும் எல்லாம் ஆரியருடைய இந்திர வருண சூரிய அக்கினி வழிபாடுகளுக்கு முழுதும் மாறானவை. ஆயின், மொஹெஞ்சோதரோ ஹரப்பாப்பட்டணங்களின் வழிபாடே இன்றைக்கும் தமிழருடையதாகத் தென்னிந்தியா எங்கனும் விளங்குகின்றது. ஆகவே, அப்பட்டணவாசிகள் எவ்வாற்றானும் ஆரியரல்லர், திராவிடரே: என்று முடிக்கக்கடவோம்.

[தொடரும்]

மதிப்புரை

ஸ்ரீகிருஷ்ண பரமாத்துமா:-[ஆசிரியர் திரு. ஆ. அரங்கநாதமுதலியாரவர்கள், சுவர்ணவிலாஸ், 13. பெரியதெரு, திருவல்லிக்கேணி. விலை ரூ 1—4—0].

இப்புத்தகம் சாக்ஷாத் பரமாத்துமாவே ஸ்ரீகண்ணபிரானைத் திருவவதரித்தவர் என்னும் மெய்ப்பொருளைப் பல மேற்கோள்களோடு வற்புறுத்தற் கெழுந்ததாம். இம்முறையில் ஆசிரியருடைய நோக்கம் இதில் நன்கு நிறைவேறியுள்ளது. ஸ்ரீபாகவதம், மஹாபாரதம், திவ்யப்பிரபந்தம் அஷ்டப்பிரபந்தம் முதலான வடமொழி தென்மொழி நூல்களில் ஆங்காங்குக் கண்ணபிரானுடைய வரலாறும் வாழ்த்துமாகப் பரந்துகிடந்த பகுதிகளையெல்லாம் ஒருங்கு தொகுத்துத் தொடர்புபட எழுதி வெளியிட்டிருப்பது,

ஆசிரியரவர்களுடைய அறிவின் பரப்பையும் ஆராய்ச்சித்திறமையையும் உழையாவுழைப்பையும் புலப்படுத்துகின்றது. இதில் எத்துணையோ பல அநுபந்தங்கள் இணைக்கப்பட்டுள்ளன. அவையெல்லாம் பலவேறு சுவைதழுவியனவாய்ப் படிப்போர்க்குப் பரமாநந்தம்விளைக்கின்றன. சாமானிய முயற்சியால் தேடிக் காண முடியாத அரிய பொருளுரைகள் பல இவ்வாராய்ச்சித்தொகுப்பில் அடங்கியிருத்தலால் கண்ணன்கழல்களில் ஈடுபாடுடைய எல்லார்க்கும் இஃதோர் இன்றியமையாத கைப்புத்தகமாய் உடனிருத்தற்குரியதென்னலாம். இதனை இயற்றியுதவிய திரு. ஆ. அரங்கநாத முதலியாரவர்கள் இதற்குமுன்னரே ஸ்ரீவைஷ்ணவம், ஸ்ரீபகவத் விஷயம், இராமசந்திரர், திருக்குறள் மொழிபெயர்ப்பு முதலிய புத்தகங்களை வெளியிட்டுத் தமிழ்ப்பணியும் சமயத்தொண்டும் தக்கவாறாற்றிப் பெருமையுற்றிருக்கிறார்கள். இவர்கள் மற்றும் பல நூல்களை உதவிப் புகழும் புண்ணியமும் எய்துமாறு கண்ணபிரான் திருவருள்புரியவேண்டும்.

தமிழர்போற்றும் இராமாநுசன்:- [எழுதியவர் திரு. ப. ரே. திருமலை ஐயங்காரவர்கள், 15, கணபதிமுதலிதெரு, திருவல்லிக்கேணி]

இது ஸ்ரீவைஷ்ணவர்களின் பரமாசாரியரான ஸ்ரீராமாநுஜப் பெருந்தகையார்விஷயமான அன்புக்காணிக்கைவெளியீடாகும். இதன் ஆசிரியர் இப்புத்தகத்தில் திருவரங்கத்தமுதனார், வேதாந்த தேசிகர், மணவாளமாமுனிகள், அழகியமணவாளதாசர், மற்றுஞ் சில தமிழ்ப்புலவர் ஆகியோர் இராமாநுஜர்பெருமையை எவ்வளவாக மனமுருகிப் பாராட்டியுள்ளன ரென்பதை விரிய விளக்கியிருக்கிறார். இன்பம்பயக்கும் எத்துணையோ தமிழ்ப்பாடல்கள் இதில் எடுத்தாளப்பட்டு இடையிடையே ஏற்ற உரைநடை தலைப்பெய்து எழுதிமுடிக்கப்பட்ட இப்புத்தகம் அடியவர்களிடை ஆசாரியபக்தி வளரச்செய்யுமென்பதில் ஐயமில்லை. இம்முறையில் திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கக் காரியதரிசி ஸ்ரீ ப. ரெ. திருமலைஐயங்காரவர்களின் சமயப்பற்றும் தமிழார்வமும் போற்றுதற்குரியவென்னலாம்.

[ஸ்ரீராமகிருஷ்ணவிஜயம் (ஸ்ரீராமமலர்):- ஸ்ரீராமகிருஷ்ணமடம், மயிலாப்பூர், சென்னை. விலை அணா 12]

இப்பெயர்கொண்ட மாதப்பத்திரிகை பாரமார்த்திகவிஷயங்களை உலகுக்குணர்த்திப் பலவருஷங்களாக உழைத்துவருதல் பலரும் அறிவர். இப்பத்திரிகையின் இவ்வருடத்துச் சித்திரைப் பகுதி 'ராமமலர்' என்னும் பெயருடன் வெளிவந்திருக்கிறது. இம்மலர் தன் பெயருக்கேற்ப முழுவதும் இராமாவதாரத்தின் மஹிமையையும் இராமாயணத்தின்பெருமையையும் ஆராய்வனவாய கட்டுரைகளால் நிரம்பியுள்ளது. இராமபிரான் திருவுரு அமைந்த அழகிய சித்திரப்படம் இம்மலரின் அட்டையில் திகழ்கின்றது. ஸ்ரீ ரா. பி. சேதுப்பிள்ளையவர்கள், ராவ்ஸாகேப். S. வையாபுரிப் பிள்ளையவர்கள் முதலிய புகழமைந்த தமிழாசிரியர்கள் இதற்குப் பொருள்பொதிந்த கட்டுரைகள் உதவியிருக்கின்றனர். அவை இராமாயணவரலாற்றின் பலபகுதிகளிலும் பரந்துகிடந்த அறவொழுக்கங்களை நன்கு அறிவுறுத்தவல்லன. அன்றியும், அவை பலதிறப்பட்டசுவையுடன்கூடிப் பயில்வார்க்குப் பெரிதும் இன்பமளிக்கின்றன. சென்னை மயிலை இராமகிருஷ்ணமடத்தினர் பலவழியாக நாட்டிற்கு நல்கிவரும் நன்மைகளில் இப் பத்திரிகைவாயிலாகத் தமிழறிவுவளர்ச்சியுறும்படி ஆற்றிவரும் தொண்டும் சாலச்சிறந்ததென்பது குறிக்கொள்ளத்தக்கது.

பிழைதிருத்தம்

செந்தமிழ்த்தொகுதி 41. பகுதி 5ல் கஅ௬ம் பக்கம் கஎ-ஆம் வரியில் அலங்காரவல்லி B O L என்றிருப்பதை, அலங்காரவல்லி P. O. L. என்று திருத்திக்கொள்க.

II. செந்தமிழ்ப்பிரசுரம்.

1	ஐந்திணையைம்பது (உரையுடன்)	0	4	0
2.	கணநூல் (5) இனியவைநாற்பது (உரையுடன்) ...	0	3	0
3.	*வளையாபதிச்செய்யுட்கள்			
4.	புலவராற்றுப்படை	0	3	0
6.	*நேமிநாதம் (உரையுடன்)			
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	0	6	0
8.	திணைமாலைநூற்றைம்பது (உரையுடன்) ...	0	8	0
9.	அநுமானவிளக்கம்	0	10	0
10.	அட்டாங்கயோகக்குறள்	0	2	0
11.	*விவசாயரசாயன சாஸ்திரச்சுருக்கம்			
12.	*பன்னிருபாட்டியல்			
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	0	4	0
14.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	0	3	0
15.	*திருச்செந்திற்கலம்பகம்			
16.	திருவாரூருலா	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்...	0	4	0
19.	தேவையுலா	0	3	0
20.	*நரிவிருத்தம்			
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	0	8	0
22.	*திருக்கலம்பகம் (ஷை)			
23.	*விக்கிரமசோழனுலா			
24.	குருமொழிவினாவிடை	0	1	0
25.	கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை... ...	0	2	0
26.	திருத்தணிகைத்திருவிருத்தம்	0	1	0
27.	மதுரைத்திருப்பணிமாலை...	0	8	0
28.	*சந்திராலோகம்			
29.	*சோழவம்சசரித்திரச்சுருக்கம்			
30.	ஞானாமிர்தக்கட்டளை	0	3	0
31.	*பாண்டியம்			
32.	மநீஷாபஞ்சகம்	0	8	0
33.	*வேளிர்வரலாறு			
34.	*அகப்பொருள்விளக்கம்			
35.	*திருமந்திரநூறுபாட்டுக்குரை			
36.	உவமானசங்கிரகம்	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	0	2	0
39.	*பழமொழி மூலமும் பழையவுரையும் (முதல் 100 செய்)			
40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ...	0	8	0
41.	பொருட்டொகைநிகண்டு	0	6	0
42	அகராதிநிகண்டு	0	12	0

43.	மேகவிடுதூது	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	0	2	0
45.	தண்டலையார்சதகம்	0	4	0
46.	இராமோதந்தம்	0	3	0
47.	பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்)	1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	0	6	0
49.	*கடைவள்ளலார்காலம்			
50.	*தமிழரும் ஆந்திரரும்			
51.	*மதங்கசூளாமணி			
52.	கூடற்புராணம்	0	10	0
53.	திருவள்ளுவர் (தமிழ்)	0	6	0
	ஷை (ஆங்கிலம்)	0	6	0
54.	அரும்பொருள்விளக்கநிகண்டு	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ...	0	12	0
56.	பாப்பாவினம்	0	10	0
57.	மதுரைமும்மணிக்கோவை	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	0	3	0
59.	கடம்பர்கோயில் உலா	0	6	0
60.	சங்கரநயினார்கோயில்அந்தாதி	0	6	0
61.	கலைசைக்கோவை	0	12	0
62.	பெருந்தொகை	5	0	0
63.	சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ...	0	5	0
64.	சிராமலைக்கோவை	0	12	0
65.	மத்யமவியாயோகம்	0	2	0
66.	*சந்திரகுப்தன்			
67.	அமிர்தாஞ்ஜலி	0	2	0
68.	திருமுருகாற்றுப்படை	0	10	0

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டுவெளியாகிவரும் இச்" செந்தமிழ் "ப்பத்திரிகைக்கு வருஷசந்தா ரூ. 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷசந்தா ரூ. 4—8—0. இதுவரை 40 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாததொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ. 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ. 5—0—0 வீதமும் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி—இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

3. சங்கப்பதிப்புப்புத்தகங்களை, ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு, ரூபா ஒன்றுக்கு அரை அணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

லக்ஷ்மிநாராயணையர், மானேஜர்.